# உதயன்

சுடர் :36 கதிர் : 013 | கார்த்திகை 23 புதன்கிழமை | 09 டிசெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051 | விலை 30 ரூபா பக்கங்கள் 20 | செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## டிசெம்பர் அதிக மழை கிடைத்த ஆண்டு 2020

யாழ்ப்பாணம், டிசெ. 9
கடந்த 15 ஆண்டுகளில் டிசெம்பர் மாதத்தில் இந்த ஆண்டே அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்த ஆண்டு 17 ➤

# தமிழ் அரசியல் கைதிகள் எவரும் சிறையில் இல்லை

## மீண்டும் முருங்கை மரத்தில் ராஜபக்ச அரசு

கொழும்பு, டிசெம்பர் 9
இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் இல்லை. அவர்களை விடுவிக்க வேண்டும் என்ற கருத்து கோரிக்கை ஏற்புடையதல்ல என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார். 19 ➤

## 798 பேருக்கு தொற்று

கொழும்பு, டிசெ.9
இலங்கையில் நேற்று மாத்திரம் 19 ➤



இலங்கை அரசின் முதலாவது காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மன்னாரில் நேற்றுக் காலை 11 மணிக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் திறக்கப்பட்டுள்ளது. மன்னார் தலைமன்னார் பிரதான வீதி நடுகுடா பகுதியில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில், 141 மில்லி. அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. (டு.56)

"பானையைத் தண்ணீக்க கரைக்கிறது, பானத்தை குடிக்கிறது எண்டு உவையள் கொரோனாவுக்கே குலைப்பன் அடிக்க வைக்கினம் பாருங்கோ",




## கொழும்பை கலங்கடிக்கிறது கொரோனா 3ஆவது அலை!

### 11,700 பேருக்கு தொற்று

கொழும்பு, டிசெ.9
கடந்த ஒரு வாரமாக கொழும்பில் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதால் அந்தப் பகுதி 16 ➤

## மழை வெள்ளத்தால் நோய்கள் வரலாம்!!

அவதானம் தேவை என்கிறார் மருத்துவர் யமுனாநந்தா

யாழ்ப்பாணம், டிசெ.9
கன மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பல்வேறு நோய்கள் வரக்கூடும் என்று எச்சரித் 17 ➤

## குளோரின் கட்டாயம்

சுகாதாரத்துறை கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 9
கன மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காரணமாக 17 ➤

## கொரோனாவின் கோரம் 20 நாள்களேயான சிசு பரிதாபச்சாவு

கொழும்பு, டிசெ. 9
இலங்கையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் 19 ➤

## மடு செல்ல எனக்கே தடையா? அதனால் அழித்தேன் புலிகளை

மன்னாரில் முழங்கினார் மஹிந்த

கொழும்பு, டிசெ.9
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத்திட்டத்தின் ஊடாக மக்களின் அபிலாஷை 19 ➤

## தெல்லி. மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.9
யாழ்ப்பாணம், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மருத்துவர்களால் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தெல்லிப்பழை கிளையின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் மேற் 19 ➤

## மருத்துவ நிபுணரை விடுவித்தால் சிகிச்சை ஸ்தம்பிதமாகும் நிலை

விளக்குகின்றார் போதனா பணிப்பாளர் சத்தியமூர்த்தி

யாழ்ப்பாணம், டிசெ.9
யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவ சேவையை இடைநிறுத்தி ஒரு வைத்திய நிபுணரைவிடுவித்தால்போதனா வைத்தியசேவையைப் பாதிக்கும் , புதிய வைத்திய நிபுணரை நியமிக்குமாறு சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளேன் என்று யாழ்ப்பா 19 ➤



## ஆயுர்வேத பானத்துக்கு முண்டியடித்த மக்கள்!!

கொழும்பு, டிசெ.9
கொரோனாவை கட்டுப்படுத்த ஆயுர்வேத மருந்துப் பானம் தயாரித்துள்ளேன் எனத் தெரிவித்த மருத்துவரின் வீட்டின் முன்பாக நேற்றுப் பெருமளவு மக்கள் குவிந்தனர். 19 ➤


செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka) கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

பெற்றுக் கொள்ள விருப்பமான
DATA LOAN
326 MB RS. 29
896 MB RS. 49
1793 MB RS. 99
எதிர்பாராமல் டேட்டா முடிந்து விட்டால் டக்கென்று மொபிடெல் இடமிருந்து பிரச்சினைகள் எதுவுமில்லாமல் டேட்டா லோன் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
செயற்படுத்த அழையுங்கள்
#170#
4G
Sri Lanka Telecom Mobitel

பிராண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலையில்

# காய்ச்சல் இருந்தபோதும் ஊழியர்கள் கட்டாயபணி

அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு



**கொழும்பு, டிசெ. 9**
**மினுவாங்கொட பிராண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலையின் பணியாளர்களுக்கு காய்ச்சல் குணங்குறிகள் தென்பட்டபோதும் அதனைப் பொருட்படுத்தாது அவர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்புத் துறை அமைச்சர் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.**

குற்றப்புலனாய்வுத் துறை தற்போது மேற்கொண்டு வரும் விசாரணைகளில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.
காய்ச்சல் அறிகுறிகளுக்காகப் பரசிட்டமோல் வில்லைகளை உட்கொண்ட பின்னர் பணியாளர்கள் தமது பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கடந்த நவம்பர் 5ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் துறைக்கு பாரப்படுத்தப்பட்டு விசாரணைகள் தொடர்கின்றன- என்றார். (ம-ப)



## பாலத்தைச் சீரமைக்க துரித நடவடிக்கைகள்

கிளிநொச்சி, டிசெ. 9
கிளிநொச்சி - கனகபுரம் மற்றும் உருத்திரபுரம் கிராமங்களுக்கான இணைப்பு வீதியில் வெள்ள இடரால் அழிவடைந்த பாலத்துக்குப் பதிலாக நிரந்தரமான பாலத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
குறித்த வீதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த பாலம் அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரால் முழுவதும் சேதமாகியுள்ளது. இதனால் குறித்த வீதியின் ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது இதனால் உருத்திரபுரம் பகுதியில் உள்ள மக்கள் தமது தேவைகளுக்கான மாற்று பாதையைப் பயன்படுத்தி வந்தனர்.
தற்போது நிரந்தரமான பாலத்தை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த வருடம் மார்ச் மாதம் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

## தற்கொலை குண்டுதாரியின் தாய் உள்ளிட்ட நால்வருக்கும் மறியல்

மட்டக்களப்பு, டிசெ. 9
சீயோன் தேவாலய தற்கொலைக் குண்டுதாரியின் தாயார் உட்பட 4 பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
குறித்த நால்வரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஸூம் தொழில்நுட்பத்தின் ஊடாக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.ஏ.றிஸ்வான் உத்தரவிட்டார்.
கடந்த வருடம் ஏப்ரல் 21ஆம் திகதி சஹ்ரான் தலைமையில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த முஹமது ஆசாத் என்பவரின் தாயாரான அலியார் லதீபா பிவி என்பவர் கைதுசெய்யப்பட்டார்.
அதேவேளை, இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டு, விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்ப டுத்தப்பட்டு விளக்கமறியலில் தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளனர். (ம-ப)

## வவுனியாவில் விபத்து ஒருவர் கவலைக்கிடம்

வவுனியா, டிசெ. 9
வவுனியா நீதிமன்றத்துக்கு அருகாமையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
யாழில் இருந்து குருநாகல் நோக்கி பயணித்த கப் வாகனம் அதேதிசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.
விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
விபத்துத் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-110)



இராமாவில் கிராம இளைஞர்கள் இணைந்து ஏ9 பிரதான வீதியின் கரையோரங்களில் 100 மரக் கன்றுகளை நட்டனர். (ம-159)

வாகனப் பெயர்மாற்றத்துக்காக

## மாவட்டச் செயலகத்தில் அலைமோதும் மக்கள்!

சாவகச்சேரி, டிசெ. 9
பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த வாகனப் பெயர்மாற்றல் நடவடிக்கை தற்போது மாவட்டச் செயலகத்துக்கு மாற்றப்பட்டதால் மாவட்ட மோட்டார் போக்குவரத்து அலகில் மக்கள் வெள்ளம் அலைமோதுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.
இதுவரை காலமும் அந்தந்தப் பிரதேச மக்கள் தமது வாகனம் பெயர்மாற்றல் தொடர்பான நடவடிக்கைகளை உடனுக்குடன் பிரதேச செயலகத்தில் மேற்கொண்டு வந்தனர்.
இந்த நடவடிக்கை தற்போது மாவட்டப் போக்குவரத்து அலகுக்கு மாற்றப்பட்டதால் மக்கள் படிவம் பெறவும் மீள வழங்கவும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. வழங்கப்படும் படிவத்துக்கு இரு வாரங்கள் தவணையிடப்படுகிறது இதனால் பலதடவைகள் மாவட்டச் செயலக அலகுக்கு அலைய வேண்டியுள்ளது என மக்கள் தெரிவித்தனர். (ம-ஜ.9)

தவிசாளர் நிரோஷ் தாக்கல்செய்த

# முன்பிணை கோரும் மனு இன்று விசாரணைக்கு!


யாழ்ப்பாணம், டிசெ. 9
யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் சட்டத்தரணிகளூடாக தாக்கல் செய்திருந்த முன் பிணை கோரும் மனு இன்று புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
பிரதேச சபைக்கு சொந்தமான அச்செழு அம்மன் கோவில் வீதியில் பிரதேச சபையின் தீர்மானமின்றி சட்டத்துக்கு முரணாக அடிக்கல் நாட்டப்பட்டு காட்சிப் பதாகையும் அமைக்கப்பட்டிருந்தது. குறித்த காட்சிப் பதாகையினை தவிசாளர் அகற்றியிருந்தார்.
இதனால் மத்திய அரசாங்கத்துக்கும் உள்ளூராட்சி அதிகார அலகுக்கும் இடையில் பிணக்கு ஏற்பட்டிருந்தது.
இந்நிலையில் குறித்த விளம்பரப் பதாகை அகற்றப்பட்டமை தொடர்பில் தவிசாளர் நிரோஷ் பொது உடமைக்கு சேதம் விளைவித்தார் எனக் குற்றம் சாட்டி கடந்த திங்கட்கிழமை முதல் கைதுசெய்வதற்கு தீவிரமாக முயன்று வருகின்றார்கள்.
இதனையடுத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முன்பிணை கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார். சட்டத்தரணிகளான வி.திருக்குமரன் மற்றும் வி.மணிவண்ணன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் முன்பிணைகோரி மன்றில் சமர்ப்பணம் செய்திருந்தனர்.
மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் இன்று அச்சுவேலி பொலிஸாரையும் மன்றில் ஆஜராகுமாறு தெரிவித்து மனு மீதான விசாரணையை ஒத்தி வைத்திருந்தது. அம்மனுமீதான விசாரணை இன்று மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ம)

# 101 மருத்துவர்கள் வடக்குக்கு

கொழும்பு, டிசெ. 9
கொழும்பு சுகாதார அமைச்சால் வடக்கு மாகாணத்துக்கு 101 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்ட மருத்துவர்களில் மூவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ,9)

# கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும்!!!

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கொக்கரிப்பு



**கொழும்பு டிசெ. 9**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தொடர்ச்சியாக பிரிவினைவாத கருத்துகளை சமூகத்தில் விதைப்பார்களாயின் கூட்டமைப்பை குறைந்தபட்சம் ஒரு வருடத்துக்காவது தடைசெய்து, அந்தக் கட்சி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும். இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர வலியுறுத்தினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அன்று பண்டாரநாயக்க, சமஷ்டி கட்சியை குறுகிய காலப்பகுதிக்கு தடை செய்தார். எனவே, போர் முடிவடைந்த கையோடு புலிகளின் அரசியல் கிளையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தடைவிதித்திருக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்ததால்தான் கூட்டமைப்பினர் அரசியல் ரீதியில் வலுப்பெற்றனர்.
அன்றே முடக்கியிருந்தால் இன்று தலைதூக்கி பிரிவினைவாதத்தை கக்கும் நிலை உருவாகியிருக்கமாட்டாது. வெளிப்படையாகவே பிரபாகரன் பற்றி கதைக்கின்றனர். எனவே, குறைந்தபட்சம் ஒருவருடத்துக்காவது கூட்டமைப்பை தடைசெய்து, அக்கட்சியின் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும்.
அமைச்சர் சரத்வீரசேகர வெளியிட்ட கருத்து முற்றிலும் உண்மை. அதனை வரவேற்கின்றோம். ஆனால் ஜனாதிபதி கனவில் பொன்சேகா கூட்டமைப்புக்கு வக்காலத்து வாங்குவதையும் கண்டிக்கின்றோம், என்றார். (ஒ,44)

# தீயில் எரிந்த பெண் நேற்று உயிரிழப்பு!

வவுனியா, டிசெ. 9
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேமமடுவில் தீயில் எரிந்து படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பெண் உயிரிழந்துள்ளார். செல்வரஞ்சினி (வயது - 41) என்ற பெண்ணே இவ்வாறு சாவடைந்துள்ளார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டில் தனித்து இருந்த சமயம் அவர் தீயில் எரிவதை அயலவர்கள் அவதானித்தனர். உடனடியாக மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினர்.
மருத்துவமனையில் அவர் நேற்று உயிரிழந்துள்ளார். உயிரிழப்பு தொடர்பில் வவுனியா நகர் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் மேற்கொண்டார். (ஒ,110)

# சந்தேகநபர் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 9
கல்வியங்காட்டில் நள்ளிரவில் வீடொன்றில் திருட முற்பட்டார் எனத் தெரிவித்து பொதுமக்களால் இனந்தெரியாத நபர் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். பின்னர் அவர் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.
கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது எனக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து சந்தேகநபரை கோப்பாய் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.
வீட்டின் உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஒ,26,111)

# வடக்குத் தமிழ் மக்களுக்கு மூவேளை உணவு போதும்

## வேறெதுவும் தேவையில்லை என்கிறது கோத்தா அரசு



கொழும்பு, டிசெ. 9
மூவேளையும் நன்றாக சாப்பிட்டு சுதந்திரமாக வாழும் சூழ்நிலையையே வடக்கு தமிழ் மக்கள் விரும்புகின்றனர். ஆனால் புலிகளிடமும், புலம்பெயர் அமைப்புகளிடமும் சோரம்போயுள்ள தமிழ்த் தலைவர்களே அம்மக்களின் மனங்களில் குரோதத்தை விதைக்கின்றனர். இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் ஆகிய திட்டங்களின் ஊடாக வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கட்டியெழுப்புவதற்கு மஹிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. புலிகளால் அழிக்கப்பட்ட ரயில் பாதைகள் புனரமைக்கப்பட்டன. வடக்கு மக்களின் உற்பத்திகளை வெளியிடங்களுக்கு கொண்டுசெல்லக்கூடிய சூழ்நிலை உருவானது. போருக்கு பின்னர் வடக்கின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கு மேல்மாகாணத்தில் இருந்த தமிழ் ஆசிரியர்களை அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தோம்.
ஆனால் 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு என்ன நடந்தது? எல்லாம் நிறுத்தப்பட்டன. நல்லாட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலைக்கு வாங்கப்பட்டனர். ஆனால் மக்களுக்கு எவ்வித நன்மையும் பயக்கவில்லை.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று உரையாற்றுவதை செவிமடுக்கும்போது வேதனையளிக்கின்றது. இனவாதத்தை தூண்டுகின்றனர்.
2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். தெற்கு மக்கள் தொடர்பில் வடக்கிலுள்ள சில அரசியல்வாதிகள் இங்கு குரோத மனப்பான்மையை உருவாக்கியிருந்தனர். அங்குள்ள மக்களிடம் நாம் உரையாற்றினோம். மூவேளையும் நன்றாக சாப்பிட்டு சுதந்திரமாக வாழும் சூழ்நிலை உருவாவதே அவர்களின் எதிர்ப்பார்ப்பாக இருந்தது.
புலிகளுக்கும், புலம்பெயர் அமைப்புகளுக்கும் சோரம் போயுள்ள அரசியல் தலைவர்கள்தான் மக்களை குழப்பியுள்ளனர்.
எனவே, இனவாதத்தை தூண்ட வேண்டாம் என கூட்டமைப்பினரிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.
புலிகள் மற்றும் பிரபாகரனின் எதிர்ப்பார்ப்புக்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு இந்நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள்.
புலிகள் அமைப்பை மீண்டும் தலைதூக்கவும் இடமளிக்கமாட்டோம். ஆகவே, எம்முடன் கரம்கோர்த்து செயற்படுமாறு அழைப்பு விடுக்கின்றோம்- என்றார். (ஒ.44)



# பாடசாலை தொடர்பான தீர்மானங்களை அதிபர்களே தீர்மானிக்கின்றனர்

## *கொழும்பில் எடுக்கப்படுவது இல்லை என்கிறார் கல்வி அமைச்சர்*

கொழும்பு, டிசெ.9
பாடசாலைகளை தற்காலிகமாக மூடுவதற்கான தீர்மானங்கள் யாவும் அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களால் எடுக்கப்படும் முடிவாகும் என கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக் ஷ்மன் கிரியெல்ல, "கண்டி மாநகர எல்லைக்குள் 45 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமை தொடர்பில் சபையில் குறுக்குக் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கெல்லாம், போகம்பர பழைய சிறைச்சாலைக்கு கைதிகள் 800 பேரை கொண்டுவந்ததுதான் காரணமாகும்" எனவும் தெரிவித்தார்.
இக் கருத்துக்கு பதிலளித்த அமைச்சர் ஜி.எல் பீரிஸ், "சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளின் அடிப்படையில், பாடசாலைகளை மூடுவதற்கான தீர்மானம் அதிபர்களால் எடுக்கப்படுகின்றது. அம் முடிவுகள் எவையும் கொழும்பில் எடுக்கப்படுவது இல்லை. அதேபோல, நீங்கள் (லக் ஷ்மன் கிரியெல்ல) கூறியதுதான் கண்டி பாடசாலைகளை மூடுவதற்கான காரணமாகும். அந்நிலைமை விரை வில் மாறும் என்றார்.

# தடுப்பு மருந்து கொள்வனவுக்கு இலங்கைக்கும் வாய்ப்பளிக்குக!

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து*

**கொழும்பு, டிசெ.9**
**கொரோனாத் தொற்றுக்கான தடுப்பு மருந்து கண்பிடிக்கப்பட்டால் அதைக் கொள்வனவு செய்யக்கூடிய நிலையில் இலங்கை தற்போது இல்லை என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**




இந்நிலையில், செல்வந்த நாடுகள் மாத்திரம் அவற்றைக் கொள்வனவு செய்ய வாய்ப்பளிக்காது இலங்கையைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் தடுப்பு மருந்துகள் கிடைப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்கம் மேலும் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே இதனை வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது, சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் தடுப்பூசி மற்றும் மருந்துகள் பற்றிப் பேசப்படுகின்றன. எனினும், அவை இன்றும் பரிசோதனை மட்டத்திலேயே காணப்படுகின்றன.

எவ்வாறிருப்பினும், இதுவரையில் உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு மருந்தோ அல்லது தடுப்பூசியோ உலகில் இல்லை.

மேலைத்தேய மருந்தாயினும் உள்நாட்டு மருந்தாயினும் அரசாங்கம் அது தொடர்பாக மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும். உலகில் தற்போது காணப்படுகின்ற நிலைமையில் இலங்கைக்கு தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகும்.

கொரோனாத் தடுப்புக்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டாலும் செல் வந்த நாடுகள் மாத்திரம் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்காது இலங்கையைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் அவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உலக சுகாதார ஸ்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ந-இ)

# பசிலுக்கு பயணத் தடையை நீக்கியது நீதிமன்றம்!



கொழும்பு, டிசெ.9
முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தடையை மாத்தறை நீதிவான் நீதிமன்றம் நேற்று நீக்கியது.

மாத்தறையில் சுமார் 66 மில்லியன் ரூபா பெறுமதியான தென்னங்காணி கொள்வனவில் நிதி மோசடி செய்தார் என தெரிவித்து பசிலுக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டது.

நகர்த்தல் பத்திரமொன்றை இன்று சமர்ப்பித்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள், அவருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதனடிப்படையில் விடயங்களை ஆராயந்த நீதிமன்றம், அவருக்கு விதிக்கப்பட்ட 2 மாத கால வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்கி உத்தரவிட்டது. (ந-இ)

# ஷானிக்கு எதிரான நடவடிக்கை சி.ஐ.டியினருக்கான அச்சுறுதல்

*ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு*



கொழும்பு, டிசெ.9
சி.ஐ.டியின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபயசேகர தொடர்ந்தும் அரசியல் பழிவாங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றமை பக்கச்சார்பின்றி செயற்பட முயல்கின்ற ஏனைய சி.ஐ.டியினருக்கு விடுக்கப்படும் எச்சரிக்கை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்கார தெரிவித்துள்ளதாவது,

மஹர சிறையில் ஷானி அபயசேகர கொரோனாவால் பாதிக்கப்பட்டவுடன் முதலில் அவரை வெலிக்கடைக்கு கொண்டு சென்று பின்பே முல்லேரியாவில் உள்ள ஐ.டி.எச் சிகிச்சை நிலையத்துக்கு கொண்டு சென்றார்கள்.

அவருடன் கைதுசெய்யப்பட்ட இரு சி.ஐ.டியினரும் தொற்றுக்குள்ளாகி உள்ளனர் எனத் தகவல் கிடைத்துள்ளது. ஆனால் அவர்களை அரசாங்கம் இன்னமும் அரச மருத்துவமனையில் கிசிச்சைக்காக அனுமதிக்கவில்லை.

ஷானி அபயசேகர இன்று அரசியல்ரீதியில் பழிவாங்கப்படும் விதம் அரசியல்வாதிகளின் ஊழல்கள் குற்றங்களில் தலையிடவேண்டாம் என நேர்மையான பொலிஸ் அதிகாரிகளுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

# நாட்டில் 18,000 கிலோ போதை ஒரு வருட காலத்தில் மீட்பு

*72 ஆயிரம் சந்தேகநபர்கள் கைது*

கொழும்பு, டிசெ.9
நாட்டில் கடந்த 2019 நவம்பர் முதல் இதுவரையான ஒரு வருட காலப்பகுதிக்குள் 18 ஆயிரம் கிலோ பெறுமதியான பல்வேறு வகை போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பில் சுமார் 72 ஆயிரம் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். மேலும், நேற்றுமுன்தினம் மாரவில தொடுவாவ பகுதியில் கைப்பற்றப்பட்ட 300 கோடி ரூபா வரை பெறுமதியான ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப் பொருள் தொடர்பில் விளக்கமளிக்கும் விதமாக இடம்பெற்ற ஒன்றிணைந்த ஊடக சந்திப்பில் கலால் வரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆரியசிங்க போதரகம இது தொடர்பில் தெரிவிக்கையில்,

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் கிடைத்த தகவல் தொடர்பில் விசாரிக்க நாம் இரு அதிகாரிகளை விஷேடமாக ஈடுபடுத்தினோம். அதனடிப்படையிலேயே கடற்படை மற்றும் தேசிய உளவுச் சேவையின் உதவியுடன் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதில் 100 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. அவை தெமட்டகொட பகுதியை சேர்ந்த போதைப்பொருள் வர்த்தகர் ஒருவருக்கு அனுப்பட்டுள்ளது. ஐஸ் போதைப்பொருள் வேறொருவருக்கு வந்துள்ளது. அவர்கள் அனைவரையும் கைதுசெய்துள்ளோம். இரு கார்கள், போதைப்பொருளை கடத்திச் செல்ல தயாராக இருந்த கே.டி.எச். வேன் மற்றும் மின் பிறப்பாக்கி ஏற்றப்பட்டிருந்த பார ஊர்தி ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளோம். மின் பிறப்பாக்கியின் உள்ளே சூட்சுமமாக மறைத்து வைத்து போதைப்பொருள் கொழும்பு கடத்தல்காரர்களுக்கு கடத்தப்பட இருந்தது.

இதனைவிட, கடத்தல்காரர்கள் கடந்த மாதம் முதல் மாரவில தொடுவாவ பகுதி ஹொட்டல் ஒன்றில் தங்கியிருந்து போதைப்பொருள் கடத்தலுக்கான வேலைகளை செய்துள்ளனர் எனத் தெரிவித்தார். (ந-இ)

# பி.சி.ஆர். பரிசோதனைகளை தவிர்க்கும் கம்பஹாவாசிகள்

*தனிமைப்படுத்த வேண்டியேற்படும் என எச்சரிப்பு*

கம்பஹா.டிசெ.9
கம்பஹா - திஹாரி பகுதி மக்கள் பி.சி.ஆர். பரிசோதனைகளை நிராகரித்து வருகின்றனர் என மாவட்ட பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பட்சத்தில் குறித்த பகுதியை தனிமைப் படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ந-இ)



# பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு இராணுவப் பாதுகாப்பு வேண்டும்

*கோரிக்கை விடுக்கிறது சங்கம்*

களுத்துறை, டிசெ.9
களுத்துறை -அட்டுளுகம பகுதியில் கடமையில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. மேலும் அட்டுளுகம பிரதேசத்தில் வசிப்பவர்கள் சுகாதார ஆலோசனைகளைப் புறக்கணிக்கும் வகையில் நடந்து கொள்கிறார்கள் என சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (வ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொறுப்பேற்பாரா பவித்ரா?

கேகாலையில் நேற்றுத் திரண்ட பெரும் மக்கள் அலை பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது. ஆயுர்வேத மருத்துவர் ஒருவரால் கொரோனாவுக்குத் தீர்வாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கும் மருந்தைப் பெறுவதற்காகவே இந்தப் பெரும் மக்கள் அலை நேற்றுத் திரண்டது. சுகாதார அமைச்சர் குறித்த மருந்தைப் பருகி அதைப் பரிந்துரைக்கும் விதமாக நடந்ததை அடுத்து 5 ஆயிரம் பேருக்கு நேற்று அந்த மருந்து வழங்கப்படுவதாக இருந்தது. எனினும் 10 ஆயிரம் பேர் வரையில் அந்த மருந்தைப் பெறுவதற்காக நேற்று அலைமோதினார்கள்.

கொரோனாவுக்கு இலங்கை மருந்தைக் கண்டுபிடித்தால் அது மகிழ்ச்சிக்குரிய விடயம்தான். ஆனால் அதை மக்களிடம் கொண்டுசேர்க்க பல உத்தியோக பூர்வமான பொறிமுறைகள் உள்ளன. ஆனால் இந்த மருந்து குறைந்தபட்சம் ஆயுர்வேத திணைக்களத்தின் அனுமதிகூட பெறப்படாதது என்பது இங்கு கவனிக்கத்தக்கது. உலக சுகாதார நிறுவனம் ஒருபக்கம், வல்லரசு நாடுகள் மறுபக்கம், வளர்ந்துவரும் நாடுகள் கூட்டணியமைத்து இன்னொரு பக்கம் என கொரோனாவுக்கு மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் முழுமூச்சாகச் செயற்பட்டு போராடிக்கொண்டிருக்கையில், ஏதோ ஒரு திரவத்தை அருந்தி அதன்பால் 10 ஆயிரம் மக்களை ஈர்ப்பது என்பது எவ்வளவுபெரிய மூடத்தனம். ஒரு சுகாதார அமைச்சர் என்ற வகையில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்குரிய விஞ்ஞானபூர்வமான தடுப்பு மருந்துகளை பெற்றுத்தர வேண்டிய அவர், இந்த மருத்துவப் பாணிக்கு 'விளம்பர மொடல்' போலமாறியுள்ளார். அவர் அந்தப் பாணியைக் குடித்ததைப் பார்த்தே மக்களுக்கு அதுகுறித்த நம்பிக்கை அதிகரித்து நேற்று அலை கடலென திரண்டோடியுள்ளனர்.

அதுமட்டுமல்ல மீண்டும் ஒரு கொரோனா கொத்தணியையும் உருவாக்கும் பதற்ற நிலையும் நேற்றைய பாணிக்கூட்டத்தால் உருவாகியுள்ளது. இந்த மனிதப் பேரலையில் இருந்து பிறிதொரு கொத்தணி உருவாகினால், குறித்த பானத்தை அருந்திக்காட்டி முரண் முன்னுதாரணத்தை வழங்கியதற்காக அதற்குரிய பொறுப்பை ஏற்பாரா பவித்ரா?

நவம்பர் 27ஆம் திகதியன்று மாவீரர் தினத்தைக் கடைப்பிடிப்பதற்கு தமிழர்தாயகத்தில் விதிக்கப்பட்டிருந்த தடைகள், இறுக்கங்கள் அனைவரும் அறிந்ததே. இறந்தவர் விடுதலைப்புலியாக இருந்தாலும் இலங்கை அரசின் பார்வையில் பயங்கரவாதியாக இருந்தாலும் பெற்றவளுக்கு பிள்ளைதான். இது ஓர் அடிப்படை மனிதாபிமானம். ஆனால் அதற்கு விதிக்கப்பட்ட தடையில் கொரோனாப் பெருந்தொற்றின் நெருக்கடி நிலையும் காரணமாகக் குறிப்பிடப் பிட்டப்பட்டது. ஆனால் இன்று இந்த மனிதப் பேரலை அரச இயந்திரத்தின் கண்களில் படாமல் போனது வியப்பானது தான். அதிலும் இராணுவத்தினர், பொலிஸார் என்போரும் குறித்த மருந்தைப் பெறுவதற்கான வரிசையில் இருந்தமை நிச்சயம் ஆச்சரியத்துக்கு உரியதே.

சீனாவின் கொத்தடிமை நாடாக மாறிக்கொண்டிருக்கும் இலங்கை, அந்த நாட்டிடம் இருந்து கற்கவேண்டிய விடயங்கள் பல உள்ளன. முதன்முதலில் சீனாவில்தான் கொரோனா தீவிரம் பெற்றது. ஆனால் இன்று அந்த நாடு கொரோனாவைக் கட்டுப்படுத்தி நிலவுக்கு விண்கலம் அனுப்பி அதன் மாதிரிகளைச் சேகரித்து, நிலவில் இரண்டாவதாகக் கொடியையும் ஏற்றியுள்ளது. ஆனால் எம் நாடு இன்னும் பாணியைக் கரைத்தும், பானைகளைத் தூக்கிக்கொண்டும் திரிகின்றது. பார்க்கப்போனால் நாம் கொரோனாவிடம் சிக்கவில்லை. கொரோனாதான் நம்மிடம் சிக்கியுள்ளது போலும்.

### முல்லைக் கடற்பரப்பில்

# இந்திய இழுவைப் படகுகளால் மீனவர்களின் வலைகள் அறுப்பு

முல்லைத்தீவு, டிசெ.9

முல்லைத்தீவு மாவட்ட கடல் பிரதேசத்தில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளால், நேற்று முன்தினம் மாத்தளன் மீனவர்களுடைய ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் அறுத்து அழிக்கப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இது தொடர்பில் மீனவர்கள் தெரிவித்ததாவது; அண்மைக் காலமாகவே இந்திய மீனவர்களின் அத்துமீறல் முல்லைத்தீவு கடற்பரப்பில் அதிகரித்துள்ளது. புயல் காரணமாக கடலுக்குச் செல்லாத மீனவர்கள் நேற்றுமுன்தினம் மாத்தளன் பகுதியில் கடற்றொழிலுக்குச் சென்றுள்ளனர். இதன்போது அத்துமீறிய இந்திய இழுவைப் படகுகளைக் கண்டுள்ளனர். நான்கு மீனவர்களின் வலைகள் இந்திய இழுவைப் படகுகளால் அறுத்து அழிக்கப்பட்டுள்ளன. வெறும் படகுகளுடன் நேற்று அந்த மீனவர்கள் கரை திரும்பியுள்ளனர். சம்பவம் குறித்து மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. இதனால் தொடர்ந்தும் எங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது - என்றனர். (ப-19)

## மீனவர்களின் பாதிப்புக்கு அரசு இழப்பீடு வழங்கும்

### மஸ்தான் எம்.பி தெரிவிப்பு

மன்னார், டிசெ.9



புரேவி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பேசாலை மீனவர்களுக்கான இழப்பீட்டை ஈடுசெய்வதற்கும், அதற்கான நிவாரணங்களை வழங்குவதற்கும், அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

புரேவி புயலால் பேசாலையை பொறுத்தவரை மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் பெரும் சேதமடைந்துள்ளன. இவர்களுக்கான இழப்பீடுகளையும், அதற்கான நிவாரணங்களையும் வழங்குவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது. மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் என்ற நிலையில் நான் சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடனும் மாவட்ட ரீதியில் மாவட்டச் செயலர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பொறுப்பாளருடனும் தொடர்பு கொண்டுள்ளேன். நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளேன்" - என்றார். (ஐ-60)

## தமிழ் அரசுக் கட்சியுடன் செத்தாலும் இணையேன்

### ஆனந்த சங்கரி இறுமாப்பு

யாழ்ப்பாணம், டிசெ.9

தான் உயிரோடு இருக்கும் வரை தமிழ் அரசுக் கட்சியுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி இணையாது என ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சம்பந்தரும் சேனாதிராஜாவும் வன்னியில் இறுதிப் போரில் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு காரணமானவர்கள். அவர்கள் நினைத்திருந்தால் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரை நிறுத்தி இருக்கலாம். ஆனால் அவர்கள் போரை நிறுத்த விரும்பவில்லை. போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வெளிநாடுகளில் சுகபோக வாழ்க்கை அனுபவித்தவர்கள் எனவே அவர்களின் தலைமையைக் கொண்ட தமிழ் அரசுக் கட்சியுடன் எந்தக் காலத்திலும் இணைவதற்கு அனுமதிக்க மாட்டேன். ஆனால் இணைப்பதற்கு அவர்கள் தற்போது முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள் எனினும் நான் உயிருடன் இருக்கும் வரை அந்த முயற்சி கைகூடாது - என்றார். (ப-20)

# ஆரம்பப் பாடசாலைகளை ஒழுங்குபடுத்த நிபுணர் குழு

கொழும்பு.டிசெ.9

நாட்டில் ஆரம்பப் பாடசாலைகளை ஒழுங்குபடுத்த நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பீ.வை.ஜீ. ரத்ன சேகர, நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஆரம்பப் பாடசாலை முறைமையைச் சீரமைக்க மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்தக் குழு தொகுத்த அறிக்கை இந்த மாதம் 11 ஆம் திகதி கல்வி அமைச்சரிடம் ஒப்படைக்கப்படும். கொவிட்19 நெருக்கடியால் 45 ஆயிரத்து 182 க்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். சில முன்பள்ளி ஆசிரியர்கள் பிற வேலை வாய்ப்புகளை நாடுகின்றனர்.


எனவே முன்பள்ளி முறையில் ஈடுபடுவோருக்கு, மாற்று வழிகளை வழங்க வேண்டியது அவசியம் - என்றார். (க-இ)

# பேசாலை கடற்கரையில் அத்துமீறிக் காணிபிடிப்பு

## காட்டாஸ்பத்திரி மீனவர்கள் குற்றச்சாட்டு

மன்னார், டிசெ.9

பேசாலை காட்டாஸ்பத்திரி மீனவர் சங்க எல்லைகளுக்குள் தனிநபர்கள் தங்களுடைய தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி கடற்கரைப் பகுதியை ஆக்கிரமித்து வேலி அடைக்கின்றனர். இதனால் அந்த இடத்தில் கடற்றொழில் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமலும், படகுகளைப் பாதுகாக்க முடியாமலும் உள்ளது என்று காட்டாஸ்பத்திரி மீனவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.



அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; கொரோனா, புயல் மற்றும் மழைகளின் பாதிப்பு, இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு, பிடிக்கின்ற மீன்களை விற்பனை செய்ய முடியாத நிலை எனப் பல பாதிப்புகளின் மத்தியில் எமது தொழிலைச் செய்து வருகிறோம். ஆனால் இப்பகுதியில் தனியார் காணியைக் கொள்வனவு செய்தவர்கள் அவர்கள் கொள்வனவு செய்த பகுதியில் இருந்து கடற்கரை காணியையும் சேர்த்து வேலி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களது இந்தச் செயற்பாட்டால் இனி வரும் காலங்களில் அவ்விடத்தில் இருந்து மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவோ அல்லது படகுகளைப் பாதுகாக்கவோ இயலாத நிலை ஏற்பட்டு மீனவர்களின் தொழில் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படக் கூடும். தனிப்பட்ட செல்வாக்கை வைத்து நீதியற்ற செயற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இந்த விடயத்தை உரிய அதிகாரிகள் நீதியான முறையில் விசாரணை செய்து ஏழை மீனவர்களின் வாழ்வாதாரத் தொழிலுக்கு இடையூறுகள் இல்லாமல் பாதுகாக்க வேண்டும் - என்றனர். (ப-213)

# யோகர் சுவாமிகள்: ஆவணப்படம் வெளியீடு



யாழ்ப்பாணம், டிசெ. 9

ஈழத்துச் சித்தர் தவத்திரு யோகர் சுவாமிகள் பற்றிய ஆவணப்பட இறுவட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது.

கொழும்புத்துறையில் அமைந்துள்ள யோகர் சுவாமி சமாதி ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா ஆவணப்படத்தை வெளியிட்டு வைக்க, சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமி ஆகியோர் இறுவட்டுகளை பெற்றுக் கொண்டனர்.

மு.சரவணனின் ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பிலும், இ.தனஞ்சயனின் எழுத்து மற்றும் இயக்கத்திலும் இந்த ஆவணப் படம் உருவாக்கப்பட்டுள்ளது. (ஐ)




மன்னார் மாவட்டத்தில்

# 490 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

மன்னார்,டிசெ.9

மன்னார் மாவட்டத்தில் 'புரேவி புயல்' காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அலுவலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 490 குடும்பங்களுக்கு 'முஸ்லிம் நிவாரணக் குழு' அமைப்பால் சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-56)

புரேவியால் பாதிக்கப்பட்ட

# வடக்கு மக்களுக்கு உதவ ஜனாதிபதி கோத்தா முடிவு

யாழ்ப்பாணம், டிசெ.9

புரேவிப் புயலால், பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதி மக்களுக்கு விஷேட இழப்பீடுகள் வழங்குவதற்கு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தீர்மானித்துள்ளார்.

கடந்த ஒரு வார காலமாக புரேவிப் புயலின் தாக்கத்தால் வடபகுதி குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பல மில்லியன் சொத்து இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் குறித்த பகுதி மக்களின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கான உரிய இழப்பீடுகளை வழங்க வேண்டும் என அமைச்சரவையில் கோரப்பட்டது.

இதன்போது புரேவிப் புயலின் பாதிப்புகள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றதும் அதற்கான இழப்பீடுகள் வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ப)



# வவுனியா நகரசபையால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை!

வவுனியா,டிசெ.9

வவுனியா நகரசபையால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது. வவுனியாவில் கடந்த சில நாள்களாக மழையுடனான கால நிலை நிலவி வருகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு வவுனியா நகரம் மற்றும் தாண்டிக்குளம் பகுதிகளில் துப்புரவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த துப்புரவு பணியின் போது நீர் வழிந்தோடும் வாய்க்கால்கள் மற்றும் நுளம்பு பெருகும் இடங்கள் என்பன துப்புரவு செய்யப்பட்டன.

துப்புரவு பணியில் நகரசபை சுகாதார பரிசோதகர் மற்றும், சுகாதார ஊழியர்கள் கலந்து கொண்டனர். (ஐ-110,18)

# பசுமை நகர் திட்டத்தில் ஒரு உள்ளூராட்சி சபை

## தெரிவுசெய்யுமாறு அறிவிப்பு

சாவகச்சேரி, டிசெ. 9

பசுமை நகரமாக்கும் திட்டத்துக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் ஒன்றை பிரமாண அடிப்படையில் தெரிவுசெய்யுமாறு மாகாண உள்ளாட்சித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்திட்டத்துக்காக பொருத்தமான உள்ளூராட்சி மன்றம் ஒன்றைத் தெரிவுசெய்து ஐக்கிய நாடுகள், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தினால் தயார் செய்யப்பட்ட வினாக்கொத்து அடங்கிய விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்ட விவரங்களைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் அறிவித்துள்ளார்.

மரம் நடுகையும் பராமரிப்பும்,பசுமைப் பகுதியும் பராமரிப்பும், சக்தி வினைத்திறன், கடுதாசிப் பாவனை, திண்மக் கழிவு கையாளுகை, உயிர் வாயு மற்றும் மாற்றுவலுப் பாவனை, நலிவுற்றவர்கள் தொடர்பான செயற்பாடுகள், தரமான பொதுப் பிரதேசங்கள் தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான ஏற்பாடுகள், சூழல் பாதுகாப்பு செயற்பாடுகள், சமூகநேய அல்லது மனிதாபிமான செயற்றிட்டங்கள் போன்ற விடயங்களில் கவனம் செலுத்திய சபைகள் தெரிவில் முன்னுரிமை பெறலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது. (ப-9)



பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட மருத்துவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் கமலநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நியமனம்பெற்ற 9 மருத்துவர்களும் மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்கப்பட்டனர். (ஐ-222)

வெள்ளத்தின் தாக்கத்தால்

## திடீரென விழும் கொட்டில் வீடுகள்: தென்மராட்சியில் மக்கள் பாதிப்பு

சாவகச்சேரி, டிசெ. 9

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக அரை நிரந்தர வீடுகள் மற்றும் கொட்டில் வீடுகள் திடீரென வீழ்கின்றன என்றும், இதனால் அவற்றில் வாழும் மக்கள் அங்கிருந்து வெளியேறி உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசத்தில் புரேவிப் புயல் மற்றும் தொடர்ந்து பெய்து வரும் மழையால் அனைத்துப் பகுதிகளிலும், வெள்ளம் தேங்கிக் காணப்படுகிறது. வீடுகளுக்குள்ளும், வீட்டைச் சுற்றிலும் வெள்ளம் தேங்கி நிற்பதால் அரை நிரந்தர மற்றும் கொட்டில் வீடுகளில் வசித்த மக்கள் வேறு இடங்களில் தங்கியுள்ளனர். தொடர்ச்சியாக வெள்ளம் காணப்படுவதால் இந்த வீடுகள் திடீரெனச் சாய்ந்து வீழ்கின்றன. இந்த நிலை நீடித்தால் மேலும் பல அரை நிரந்தர வீடுகளும், கொட்டில் வீடுகளும் விழும் அபாயம் உள்ளன என பொது மக்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நுணாவில் மேற்கு பிரிவில் கொட்டில் வீடு ஒன்றும், கோயிற்குடியிருப்பு பிரிவு பெரிய மாவடியில் அரை நிரந்தர வீடு ஒன்றும் வீழ்ந்துள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-9)

# தென்மராட்சியில் 287 பேர் இடைத்தங்கல் முகாம்களில்

**சாவகச்சேரி, டிசெ. 9**

**தென்மராட்சி பிரதேசத்தில் புரேவிப் புயல் மற்றும் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட 77 குடும்பங்களைச் சேர்ந்த 287 பேர் ஏழு இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர் என்று பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.**

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பிரிவில் சக்தி அம்மன் வித்தியாலயத்தில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 118 பேரும், நுணாவில் மேற்குப் பிரிவில் நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலையில் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 19 பேரும், மட்டுவில் சந்திரபுரம் பிரிவில் மட்டுவில் மகா வித்தியாலயத்தில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேரும், கொடிகாமம் தெற்கு பிரிவில் போக்கட்டி அ.த.க. பாடசாலை மற்றும் தவசிகுளம் கண்ணகை அம்மன் கோவில் மண்டபம், ஆகிய இடங்களில், 20 குடும்பங்களைச் சேர்ந்த 77 பேரும், எழுதுமட்டுவாழ் தெற்கு பிரிவில் எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேருமாக மொத்தம் 77 குடும்பங்களைச் சேர்ந்த 287 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டு சமைத்த உணவுகளும், தேவையான சுகாதாரப் பொதிகளும், நுளம்பு வலை, பாய், கூரை விரிப்பு, தரைவிரிப்பு போன்றவையும் வழங்கப்படுகின்றன. (ப-9)

## மன். வயல்களில் தேங்கிய மேலதிக நீர் வெளியேற்றம்



மன்னார், டிசெ. 9

வயல்களில் நிறைந்துள்ள வெள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கையில் மன்னார் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் வடக்கு கிழக்கை அச்சுறுத்திய புரேவிப் புயல் காரணமாக மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழையால் பெரும்போகப் பயிர் செய்யப்பட்ட வயல் நிலங்கள் முற்றாக நீரில் மூழ்கின. பிரதான வாய்க்கால்களில் தொடர்ச்சியாக நீர் வழிந்து செல்வதாலும் இடையிடையே மழை பெய்து கொண்டிருப்பதாலும் வயல்களில் தேங்கியிருக்கும் நீர் வெளியேறாமல் தேங்கியுள்ளது. இதனால் இயந்திரங்கள் மூலம் நீரை இறைத்து வெளியேற்றி பயிர்களைக் காப்பாற்றும் முயற்சியில் மன்னார் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். (ப-213)

## ஆடை வடிவமைத்தல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.9

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் ஊடாக நடத்தப்படும் நல்லூர் பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் 2021ஆம் ஆண்டுக்கான மனைப்பொருளியல் டிப்ளோமா கற்கைநெறியுடன் இணைந்த ஆடை வடிவமைத்தலுக்கான தொழில் முறைமை கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்ற நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 18 தொடக்கம் 35 வயதுக்குட்பட்ட பெண்கள் விண்ணப்பிக்க முடியும்.

எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவில் விண்ணப்பங்களைப்பெற்று குறித்த பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கமுடியும் என்று பிரதேச செயலர் திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார். (ஐ)

# வெள்ளத்தை வெளியேற்ற வீதியை வெட்டிய உறுப்பினர்

மக்கள் விசனம்

சாவகச்சேரி டிசெ.9

தனது காணியில் காணப்பட்ட வெள்ளத்தை வெளியேற்ற தார்க் கலவை வீதியை வெட்டிவிட்ட நகரசபை உறுப்பினர் தொடர்பில் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

சாவகச்சேரிப் பகுதியில் பெய்த தொடர்ச்சியான மழையால் அனைத்துக் காணிகளும் வெள்ளத்தில் நிறைந்தன. நகர சபையின் சாவகச்சேரி கற்குழி வீதியில் பல வருடங்களுக்கு முன்னர் மூன்று அடி அகலமான சீமெந்துக் கட்டிலான வாய்க்கால் அமைக்கப்பட்டு மழைவெள்ளம் கற்குழிக் குளம் ஊடாக வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்த வாய்க்கால் ஊடாக செருக்கல் பிள்ளையார் கோவில், கண்டுவில் ஒழுங்கை போன்றவற்றின் வெள்ளம் வெளியேறுகிறது. இந்நிலையில் சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர் ம.நடனதேவன். .தனது காணிக்குள் வெள்ளம் வந்துள்ளதால் அதனை வெளியேற்ற தார்க்கலவை வீதியை வெட்டி வாய்க்காலுடன் இணைத்துள்ளார். இதனால் இந்த வீதி ஊடாக போக்குவரத்துச் செய்ய முடியாமல் மக்கள் வேறு வீதிகளில் வெள்ளத்தின் ஊடாகப் பயணித்தனர். நகர சபை உறுப்பினரின் இந்தச் செயற்பாடு ஏனைய வரியிறுப்பாளர்களுக்கு முன்னுதாரணமாகக் கொள்ளப்பட்டு வெள்ளத்தை வெளியேற்றப் பலர் தமது வீட்டுக்கு முன்பாக உள்ள வீதிகளை வெட்டும் நிலை ஏற்படும் என்றனர்.



சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர் ம.நடனதேவனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது கிராமத்துக்குள் 3 அடிக்கு வெள்ளம் தேங்கி இருந்ததால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். இதனால் வீதியை வெட்டி வெள்ளம் வெளியேற்றப்பட்டது. தற்போது வீதிக்கு வோக் வைக்கப்பட்டுள்ளது - என்றார். (ப-9,159)

நல்லாட்சியில்

## மஹாபொல நிதி மோசடி; விசாரணை சி.ஐ.டியிடம்

கொழும்பு, டிசெ.9

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மஹாபொல நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் விசாரிப்பதற்கான பொறுப்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய வாய்மூல விடைக்கான கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. எவ்வித கால தாமதமும் இன்றி மஹாபொல உதவித்தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நிலுவைத் தொகைகள் அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (வ-ரி4)



இயலாமையுடன் கூடிய நபர்களுக்கான சுய உதவிக் குழுக்களின் அங்கத்தவர்களுக்கான வியாபாரத் திட்டமிடல் பயிற்சி முல்லைத்தீவில் இடம் பெற்றுள்ளது. துணுக்காய் ஒளிரும்வாழ்வு நிறுவனத்தில் இந்தப் பயிற்சி நடைபெற்றது. (ப-222)

# முல்லைத்தீவில் திணைக்களம் இருக்க கொழும்பிலிருந்து வந்து மலை அளவீடு

## மக்கள் விசனம்

**முல்லைத்தீவு, டிசெ.9**

**தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்ட முல்லைத்தீவு குமுழமுனை குருந்தூர் மலைப்பகுதி கொழும்பில் இருந்து வந்த நிலஅளவைத் திணைக்களத்தினரால் அளவீடு செய்யப்பட்டுள்ளது என்று கிராம அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. அது தொடர்பில் மக்கள் வினத்தையும் வெளியிட்டுள்ளனர்.**

முல்லைத்தீவு மாவட்ட தொல்பொருள் திணைக்களம் மற்றும் நில அளவைத் திணைக்களத்தின் அனுமதிகள் எதுவும் இன்றி இந்த அளவீடு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்தவாரம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள எந்த அரச திணைக்களங்களின் அனுமதி இன்றியும் இவ்வாறான நடவடிக்கை ஒன்று இடம் பெற்றுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் மூத்த நில அளவைத் திணைக்கள அதிகாரிகாரியின் அனுமதி இல்லாமல் இவ்வாறு கொழும்பில் இருந்து வந்த நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் இரண்டு நாள்கள் குறித்த பகுதியில் நில அளவீடுகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-19)



## தேறாங்கண்டல் குளத்தில் மீன் குஞ்சுகள் விடுவிப்பு

முல்லைத்தீவு,டிசெ.9

உலக உணவு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தேறாங்கண்டல் குளத்தில் மீன்குஞ்சுகள் நேற்று விடுவிக்கப்பட்டன.

இத் திட்டத்தினூடாக மக்களுக்கு கால்நடை வளர்பு மற்றும் காளான் வளப்பு போன்ற செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படுவதுடன், குளங்களில் மீன்குஞ்சு விடும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இத் திட்டத்தினூடாக நன்நீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தேறாங்கண்டல் குளத்தில் மீன்குஞ்சுகள் விடுவிக்கப்பட்டன.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், துணுக்காய் பிரதேச செயலர் ஆ.லதுமீரா, மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் திருமதி.ஜெயபவானி கணேசமூர்த்தி, மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் புனிதகுமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-246)

## மருத்துவத் தவறுகளால் உயிரிழப்பு நேரவில்லை

*பளை மருத்துவமனை பொறுப்பதிகாரி தெரிவிப்பு*

கிளிநொச்சி,டிசெ.9

விபத்தில் உயிரிழந்தவருக்கு எவ்விதமான மருத்துவத் தவறுகளும் இடம்பெறவில்லை என்று பளை பிரதேச மருத்துவமனையின் பொறுப்பதிகாரி மருத்துவ கலாநிதி க.பகீரதன் தெரிவித்தார்.

இத்தாவில் பகுதியில் விபத்துக்குள்ளான நபர் ஒருவர் படுகாயங்களுடன் பளை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் மருத்துவமனை நிர்வாகத்தினர் மற்றும் மருத்துவர் அவரை மருத்துவமனைக்குள் அனுமதிக்காது எந்தவிதமான முதலுதவிகளும் வழங்காது வெளியில் வைத்து கை நரம்பு நாடியைப் பிடித்து குறித்த நபர் இறந்துவிட்டார் எனக் கூறியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

அத்தோடு படுகாயங்களுடன் கொண்டு செல்லப்பட்ட நபர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வரை உயிருடன்தான் இருந்தார். அவருக்கு எந்தவிதமான முதல் உதவிகளும் வழங்காமையாலேயே அவர் உயிரிழந்தார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும்போதே பொறுப்பதிகாரி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட நபரை வெளிநோயாளர் பிரிவில் இருந்த மருத்துவர் பார்வையிட்டார். அப்பொழுது விபத்துக்குள்ளான நபர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன் குறித்த நபரின் இறப்பில் இந்தவிதமான மருத்துவத் தவறுகளும் இடம்பெற்று இருப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை என்றார். (ப-6)

## தற்கொலைத் தாக்குதல் பயிற்சி பெற்றனரென 6 பெண்கள் கைது

கொழும்பு, டிசெ.9

தற்கொலைத் தாக்குதல்கள் உள்ளிட்ட பயிற்சிகளைப் பெற்றனர் எனக் கூறப்படும் 6 பெண்கள் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் அடங்கிய சிறப்புப் பொலிஸ் குழுவால் காத்தான் குடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் 6 பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெண்ணொருவரும் அவரது 3 மகள்களும், இரு மருமகள்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் நேற்றுமுன்தினம், கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்துக்கு மேலதிக விசாரணைகளுக்காக அழைத்து வரப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைதான பெண்கள் ஏற்கனவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் எனவும் தெரவிக்கப்படுகிறது. (ஐ-இ)

## தென்னை செய்கையிலும் இராணுவம்

'துரு மிதுரு நவ ரடக்' பயிர்ச் செய்கைத் திட்டத்தின் கீழ் குட்டிகலையில் உள்ள இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதியில் சுமார் 30 ஏக்கர் நிலப்பரப்பில் தென்னங்கன்றுகளை நடுகைசெய்யும் பணியை இராணுவம் ஆரம்பித்துள்ளது.

குட்டிகலவில் உள்ள முதலாவது இலங்கை இராணுவ பொது சேவைப் படையணியின் வீரர்கள், அதன் கட்டளை அதிகாரி லெப்டினனட் கேர்ணல் சீ.எஸ். தெமுனி ஆகியோர் இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டனர். (ப-ரி4)



முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 30 குடும்பங்களுக்கு, அறம் செய் அறக்கட்டளையின் நிதி உதவியுடன், தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (க-19)



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, தற்காலிக வீடுகளில் வசிக்கும் 14 குடும்பங்களுக்கு, தறப்பாள் மற்றும் நிலவிரிப்புக்கள் வழங்கப்பட்டன. (க-222)



சுதுமலை அம்பாள் அறக்கட்டளை நிதியத்தின் மூலம், சாவற்கட்டு யாவில் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துள்ள 21 குடும்பங்களுக்கு, படுக்கை விரிப்புகளும், பிஸ்கட் பொதிகளும் வழங்கப்பட்டன. (க)



வரோட் அமையத்தால், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு அவசர நிவாரணமாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (க-222)



தாய்த்தமிழ் பேரவை ஊடாக தாயக விருட்சம் சுவிஸ் அறக்கட்டளையின் நிதிப்பங்களிப்பில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 15 குடும்பங்களுக்கு, உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (க-222)



மன்னார் மாவட்டத்தின் கரையோர கிராமங்களைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு, சுவிஸர்லாந்து தமிழ்க் கல்விச்சேவையின் நிதி ஆதரவில்,வெளிச்சம் நிறுவனம் ஊடாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (க-222)

# காலியில் பாடசாலைகள் வெள்ளி வரை பூட்டு

காலி,டிசெ.9
காலி கல்வி வலயத்தின் அனைத்து பாடசாலைகளையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை தொடர்ந்தும் மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கொவிட்-19 வைரஸ் தொற்று நிலைமையைக் கருத்திற்கொண்டு காலி கல்வி வலயத்தில் 26 பாடசாலைகளை நேற்றுமுன்தினம் தொடக்கம் இன்று வரை மூன்று தினங்களுக்கு மூட தீர்மானிக்கப்பட்டிருந்தது.
எவ்வாறாயினும், நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் குறித்த பாடசாலைகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை மூடிவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என தென் மாகாண கல்விச் செயலாளர் ரஞ்சித் யாபா தெரிவித்தார். (ஐ-இ)

# கொரோனா பரவ அரசே காரணம்

## தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.9
**அரசு கொரோனாவுடன் வாழ்வோம் எனக் கூறி, கொரோனா வைரஸ் பரவுவதற்கு இடமளித்து விட்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய குற்றம் சுமத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அரசு தனது இயலாமையை கொரோனாவைக் காட்டி மூடி மறைத்துவிட்டு, தவறை மக்கள்மீது சுமத்துவதைக் காண முடிகிறது. அரசின் இயலாமையை மக்கள் மீது சுமத்த இடமளிக்க முடியாது.
சிறைச்சாலைகள், பல்கலைக்கழங்கள் மற்றும் பாடசாலைகளுக்குள் நடக்கும் சம்பவங்கள், பொருள்களின் விலை அதிகரிப்பு என அனைத்தையும் கொரோனா மட்டுப்படுத்துவதை ஏற்க முடியாது.
கொரோனாவுடன் வாழுங்கள் என்று மக்களிடம் கூறாது, கொரோனாவைக் கட்டுப்படுத்துவதே அரசின் இலக்காக இருக்க வேண்டும் - என்றார். (க-இ)




# விளாம்பழ வியாபாரம் கல்விளானில் அமோகம்

முல்லைத்தீவு, டிசெ.9
முல்லைத்தீவு துணுக்காய் கல்விளான் பகுதியில் விளாம்பழ வியாபாரத்தில் மக்கள் ஈடுபட்டுள்ளார்கள்.
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா நிலை காரணமாக தொழில் வாய்ப்பில்லாத நிலையில் அவர்கள் இந்த விளாம்பழ வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். முல்லைத்தீவின் துணுக்காய் பிரதேசத்தில் கல்விளான் பகுதியில் அதிகளவான விளாத்தி மரங்கள் காணப்படுகின்றன. அதில் விழும் பழங்களைப் பொறுக்கி ஒரு பொலித்தீன் பையில் கட்டப்பட்டு 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. வீதியின் கரையோரங்களில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. (ப-19)

# விபத்துக்களை குறைக்கும் விழிப்புணர்வு செயற்றிட்டம்

முல்லைத்தீவு, டிசெ.9
உழவு இயந்திரங்களால் ஏற்படும் விபத்துக்களை குறைக்கும் முகமாக ஒளிரும் ஸ்டிக்கர்கள் ஒட்டும் விழிப்புணர்வு செயற்றிட்டம் முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.
அவலோன் நிறுவனத்தின் அனுசரணையுடன் முதற்கட்டமாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட உழவு இயந்திரங்களுக்கு ஒளிரும் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.
நிகழ்வில் மாவட்டச் செயலர் க.விமலநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு விழிப்புணர்வு வேலைத் திட்டத்தை ஆரம்பித்தார். (ஐ-246)



# உணவக உரிமையாளர்களின் வாழ்வாதாரமும் பாதிப்பு

கிளிநொச்சி, டிசெ.9
கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உணவக உரிமையாளர்களின் வாழ்வாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இது தொடர்பில் பாதிக்கப்பட்ட உணவக உரிமையாளர்கள் தெரிவித்ததாவது:
தற்பொழுது நாட்டில் தானிய வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தானியமான உழுந்து தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் எங்கும் இல்லை. அப்படியிருந்தாலும் கிலோ 1500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. வரலாற்றில் முதல் தடவையாக, உழுந்துக்குத் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. தோசை, வடை, இட்லி போன்ற பிரதான உணவுப் பொருள்கள் இதனைக்கொண்டே உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவது வழக்கம். அதேபோன்று பயறுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாளாந்தம் பயன்படுத்தப்படும் புளி, மஞ்சள் போன்ற மூலப்பொருள்களும் எம்மிடம் இல்லை. எனவே எமது வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்ப சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமக்கு தானியப் பொருள்களைப் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றனர். (ப-113)



அண்மையில் பெய்த மழை காரணமாக மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகிறது. இதனால் மாணவர்கள் கற்றல் நடவடிக்கையை சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

# நுவரெலியாவில் மேலும் 19 பேருக்கு கொரோனா

நுவரெலியா, டிசெ.9
நுவரெலியா மாவட்டத்துக்குட்பட்ட கினிகத்தேன, பிளக்வோட்டர் தோட்டத்தில் மேலும் 19 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அப்பகுதி முழுமையாக முடக்கப்பட்டுள்ளது.
தோட்டத்தில் இருந்து எவரும் வெளியேறுவதற்கும் அத் தோட்டத்தின் கீழ் மற்றும் மேல் பிரிவுகளுக்கு வெளியார் வருவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.
பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.
கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கும் சுகாதார அதிகாரிகள், மறுஅறிவித்தல் விடுக்கப்படும் வரை தனிமைப் படுத்தல் நடைமுறைகள் தொடரும் எனவும் அறிவித்துள்ளனர். எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஐவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ள நிலையில் மேலும் 600 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகளைப் பெறும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. (ப)

# வவுனியா நகரிலுள்ள கடைகளுக்கு பெயர் மாற்றங்களைச் செய்யலாம்

## வவு. நகரசபைத் தவிசாளர் அறிவிப்பு

வவுனியா,டிசெ.9
வவுனியா நகரில் ஆறு பேர்ச்சுக்கும் குறைவான அல்லது கூடிய காணிகளைக் கொண்டவர்கள் பெயர் மாற்றம் செய்து கட்டட அனுமதியையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
வவுனியா நகரசபையின் முயற்சியால் ஆறு பேர்ச்சுக்கும் குறைவான அல்லது கூடிய காணிகளை பெயர் மாற்றம் செய்வதுடன், கட்டட அனுமதியையும் பெற்றுக் கொள்ளமுடியும் என்று நகர அபிவிருத்தி அதிகாரசபையால் புதிய சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த வகையில் வவுனியா நகரில் அமைந்துள்ள ஆறு பேர்சுக்கும் குறைந்த அல்லது கூடிய காணிகளைக் கொண்டவர்கள் இனிமேல் கட்டட அனுமதிகளையும் பெயர் மாற்றங்களையும் செய்துகொள்ளலாம். அத்துடன் உறுதிக் காணிகள் மற்றும் நீண்டகால குத்தகைக் காணிகளுக்கு மாத்திரம் இந்த நடைமுறை பொருந்தும். இது தொடர்பான மேலதிக தகவல்களை நகரசபை அலுவலகத்துக்கு வந்து பெற்றுக் கொள்ள முடியும். நகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அந்தக் கடைகளை இன்னொருவருக்கு விற்பனை செய்வதோ அல்லது வாடகைக்கு வழங்குவதோ தண்டனைக்குரிய குற்றமாகும். கடந்த வருடம் யாழ் மாநகர சபையில் இப்படியான கடைகளை உரிய ஆவணங்கள் இருக்கும் பட்சத்தில் தற்போதைய உரிமையாளர்களுக்கு மாற்றிக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. வவுனியாவிலும் இப்படியான பிரச்சினைகள் இருப்பதால் அதனை மாற்றுவதற்கான முயற்சிகளை நாம் எடுத்துள்ளோம். அதற்கான அனுமதியை வட மாகாண ஆளுநரிடம் கேட்டுள்ளோம். சரியான ஆவணங்களுடன் வியாபார நிலையங்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தால் அவர்களுக்கு பெயர் மாற்றங்கள் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (ப-110)

## யாழ்ப்பாணத்தில்

# தனிமைப்படுத்தலின்போது பாரபட்சம் சுகாதார அமைச்சரிடம் முறைப்பாடு!

**யாழ்ப்பாணம், டிசெ. 9**

**தனிமைப்படுத்தல் செயற்பாடுகளின்போது வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சிலர் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றனர் என தனிநபர் ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார். இது தொடர்பில் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சிக்கு முறைப்பாடு செய்துள்ளார்.**

கொழும்பு தெஹிவளையில் வசிக்கும் கந்தையா குணநேசனே இந்த முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளார்.

அவரது முறைப்பாட்டுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வேலணை வடக்கில் எனது வீட்டின் கிரகப்பிரவேசத்துக்கான அனுமதி நவம்பர் மாதம் 25ஆம் திகதி வேலணை சுகாதாரப் பரிசோதகரால் வழங்கப்பட்டிருந்தது.

27ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் 25பேர் மாத்திரமே கலந்துகொண்டனர். அதுவும் பகுதி பகுதியாகவே 25பேரும் சமூகளித்திருந்தனர்.

நிகழ்வு முடிவடைந்து 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மீண்டும் கொழும்பு சென்று கொண்டிருந்தபோது, தொலைபேசிக்கு அழைப்பெடுத்த பொதுச் சுகாதாரப் பதிசோதகர் ஒருவர், உங்களையும் உங்கள் நிகழ்வுக்கு வருகை தந்த அனைவரையும் தனிமைப்படுத்த வேண்டுமெனக் கடும் தொனியில் கூறினார். ஆனால் நிலைமையை விளங்கப்படுத்தியபோதும் அதனை அவர் ஏற்க மறுத்து தொலைபேசியைத் துண்டித்துவிட்டார். ஆனாலும் நான் கொழும்புக்குச் சென்றுவிட்டேன். அடுத்த நாள் யாழ். நகரில் உள்ள எனது உறவினர் குடும்பமும் வேலணையில் எனது புதிய வீட்டுக் கிரகப்பிரவேசத்துக்கு தந்த அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என அறிந்தேன்.

உடனடியாகக் கொழும்பில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் பி.சி.ஆர். பரிசோதனை செய்தேன்.

கொரோனா தொற்று இல்லை என்று மருத்துவ அறிக்கை கிடைத்தது. அந்த அறிக்கையுடன் உண்மை நிலவரத்தை விளக்கி எழுதப்பட்ட கடிதத்தை வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோருக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடவியலாளர் மூலமாக நேரடியாகக் கையளித்தேன். எனது மருத்துவ பரிசோதனை அறிக்கையை ஏற்க முடியாதெனவும் என்னைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த வேண்டுமெனவும் கட்டளையிடப்பட்டது. நான் கடந்த ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதியில் இருந்து யாழ்ப்பாணத்திலுள்ள எனது உறவினர் ஒருவரின் இல்லத்திலேயே தங்கியிருந்தேன்.

இது தொடர்பாக வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு எனது மருத்துவ அறிக்கை மற்றும் விளக்கக் கடிதம் ஆகியன நேரடியாகக் கையளிக்கப்பட்ட பின்னர் வேலணையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த குடும்பங்கள் அனைத்தும் அதிலிருந்து விடுவிக்கப்பட்டன.

ஆனால் வேலைணையில் வாமும் எனது உறவினர்கள் சிலரும் யாழ். நகரில் நான் தங்கியிருந்த எனது உறவினரின் மற்றொரு குடும்பமும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படவில்லை, என்று முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

இச் செயற்பாடு தனிப்பட்ட பழிவாங்கல். கொரோனா சுகாதார விதிமுறைகளைப் பயன்படுத்தி சாதாரண பொதுமக்களை அடிமைகள் போன்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சிலர் நடத்துகின்றனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இராணுவத்தையும் பொலிஸாரையும் தங்களோடு அழைத்துச் சென்றே பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்துகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்லும் அரசியல்வாதிகளை இவர்களால் தனிமைப்படுத்த முடிகின்றதா என்று கேள்வி எழுப்பினார்.

களுபோவில மருத்துவமனையில் இரண்டாவது தடவையாகவும் மேற்கொண்ட பி.சி.ஆர். பிரிசோதனையில் தொற்று இல்லையென நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் கேட்டபோது, அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார் எனக் கூறினாலும் இடையில் கொழும்பு சென்று வந்தார் என்ற தகவல் கிடைக்கப்பெற்றது. கொரோனா தடுப்பு முற்பாதுகாப்பு நடவடிக்கையாக, சந்தேகத்துக்கு இடமானவர்களை அவர்களுடன் தொடர்புடையோரை நாம் தனிமைப்படுத்த முடியும். எமக்கு சந்தேகம் இருந்தமையால் அதனைச் செய்தோம், என்றார். (ஒ,5)

## சா/த பரீட்சை திகதி நிர்ணயம் சரியானதே!!

*ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.9

கல்வி அமைச்சு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை ஒத்திவைக்காது பரீட்சைக்கான திகதியை நிர்ணயித்தமை சரியான தீர்மானம் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நியாயமான திட்டத்தை வகுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். (ற-இ)

## வீடு கையளிப்பு

திருகோணமலை மாவட்டத்தின் வெள்ளை மணல் கரடிப்பூவல் கிராமத்தில் கடந்த 30 வருடகாலமாக நிரந்தர வீடின்றி கொட்டிலில் வாழ்ந்த குடும்பம் ஒன்றுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடொன்று கையளிக்கப்பட்டது.

வன்னி ஹோப் ஆஸ்திரேலியா மற்றும் மக்கள் சேவை மன்றம் என்பன இதற்கு நிதியுதவி அளித்துள்ளன. (வ-இ)

## கரியாலை நாகபடுவான் வான் பாயலாம்!

### மக்களே அவதானம்!!

கிளிநொச்சி, டிசெ. 9

கரியாலைநாகபடுவான் குளத்தின் நீர்மட்டம் நேற்று 9.9 அடியை அடைந்துள்ளது.

குளத்தின் முழுக்கொள்ளளவு 10 அடி. மழை தொடர்ந்தால் நேற்று பிற்பகல் முதல் வான்பாயக்கூடிய சாத்தியப்பாடு உள்ளது.

எனவே வான் பாயும் பகுதிக்கு அண்மையிலுள்ள மக்கள் மிக அவதானத்துடன் இருப்பதுடன் கால்நடைகளையும் உயர்வான நிலப் பகுதிகளுக்கு கொண்டு செல்லுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது. (ஒ,5)

## சிறைச்சாலை களேபரம்; 145 பேரிடம் வாக்குமூலம்

கொழும்பு டிசெ. 9

மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பில் சி.ஐ.டியினர் இதுவரை 145 பேரிடம் வாக்குமூலங்களை பதிவுசெய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண நேற்று தெரிவித்தார்.

சிறைச்சாலை மருத்துவமனையில் பணியாற்றிய மருத்துவர்கள் சம்பவத்தின்போது சிறையில் இருந்த கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட மேலும் சிலரிடமே இவ்வாறு வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

எதிர்காலத்திலும் பதிவு செய்யப்படும். விசாரணைகள் விரைவில் நிறைவடையும் என்று எதிர்ப்பார்க்கின்றோம். அதேவேளை, மோதல் சம்பவத்தில் உயிரிழந்த 11 கைதிகளில் இதுவரை 7 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. உறவினர்கள் மூலம் நால்வரின் சடலங்களும், கைவிரல் அடையாளம்மூலம் மூவரின் சடலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. உயிரிழுந்தவர்களில் 8 கைதிகளுக்கு கொரோனா தொற்றியிருப்பதும் கண்டறியப்பட்டது, என்றார். (ஒ,44)

## 6,878 பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, டிசெ.9

இலங்கையில் முப்படையினரால் நடத்தப்படும் 64 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தற்போது 6 ஆயிரத்து 878 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். அத்துடன், மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் மேலும் 7 ஆயிரத்து 634 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, திவுலுப்பிட்டிய பேலியகொடை கொரோனாக் கொத்தணியில் இதுவரை 17 ஆயிரத்து 396 பேர் குணமடைந்துள்ளனர். (ற-இ)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

கொழும்பு, டிசெ.9

ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹல்கஹவத்த பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பில் அந்த பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (வ-இ)

## 18 வயதுடைய இளைஞர் ஹெரோய்னுடன் கைது

கொழும்பு, டிசெ.9

பேலியகொட பகுதியில் 18 வயது இளைஞர் ஒருவர் 5 கிராம் 8 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத்த வீதி பகுதியில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். (வ-இ)



## இன்றைய நாள்

**மேடம்:** உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்பார்கள். தாய் மாமன் மூலமாக எதிர்பாராத நன்மைகள் ஏற்படக்கூடும். கணவன், மனைவிக்குள் அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** வாழ்க்கைத் துணையின் முயற்சியால் சங்கடங்கள் தீரும். நன்கு முயன்று சிரமத்திலிருந்து விடுபட்டு நிம்மதி அடைவீர்கள். அரசாங்கத்திடம் செய்த முயற்சிகள் சாதகமாகும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவது உற்சாகம் தரும். வாழ்க்கைத் துணைக்காக செலவுகள் செய்ய வேண்டி வரும். நிம்மதி மீளும். சகோதரரால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். மிகுந்த தன்னம்பிக்கையுடன் செயல்படுவதால் வெல்வீர்கள். ஆதாயம் உண்டு. எதிலும் பொறுமையை கடைபிடியுங்கள்.

**சிம்மம்:** உறவினர்களிடம் பேசும்போது நிதானத்தை இழக்க வேண்டாம். புதிய முயற்சி சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணை வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** திடீர் சுபச்செலவுகளால் சிலருக்கு கையிருப்பு குறையும். வேலை பற்றிய முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. சிறு வயது வகுப்பு நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** உணவால் உடல்நலம் பாதிக்காதவாறு கவனமாக இருக்கவும். வாழ்க்கைத் துணையுடன் அனுசரித்துச் செல்வதால் மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்:** செல்லும் இடங்களில் சிந்தனைவளத்தால் சிறப்படைவீர்கள். எதிர்பார்த்த உதவி எளிதில் கிடைக்கும். வழக்குகளில் தேக்க நிலை மாறும்.

**தனுசு:** தாயின் உடல்நலத்தில் சிறு தொந்தரவுகள் உண்டாகி சரியாகும். கவலை தீரும். குடும்ப ஒற்றுமையில் சீரான நிலை காணப்படும்.

**மகரம்:** அரசுப்பணியாளர்களுக்கு புதிய வாய்ப்புகள் உருவாகும். பதவி உயர்வு வரும். நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறும். மேலிடத்துடன் முன்பு இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும்.

**கும்பம்:** நற்செயல்களின் வெளிப்பாடுகளால் உயர்வைப் பெறுவீர்கள். மனதில் சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். திடீர் செலவு ஏற்படும்.

**மீனம்:** முன்பு நிலுவையில் இருந்த பணம் திரும்பக் கிடைக்கும். கடன் சுமைகள் நீங்கி நிம்மதியான வாழ்க்கை உண்டாகும். அலுவலகத்தில் திறம்படப்பணியாற்றி நற்பெயர் பெறுவீர்கள்.

# அடுத்த காலாண்டில் பொருளாதாரம் உயரும்

### பந்துல நம்பிக்கை

கொழும்பு, டிசெ.9
2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், தேசிய பொருளாதார வளர்ச்சி மட்டத்தை 5 அல்லது 6 வீதத்தால் அதிகரிக்க எதிர்பார்த்துள்ளோம் என்று அமைச்சர் பந்துல குணவர்தன நம்பிக்கை வெளியிட்டார்.
பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
கொவிட்19 வைரஸ் தாக்கத்தால், தேசிய பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் நெருக்கடியான சூழ்நிலையில் அரசு நாட்டு மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களையும், நிவாரணக் கொடுப்பனவையும் வழங்கியுள்ளது. ஆகவே 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அரசு பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும். எனினும் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (க-இ)

## நெருக்கடியுள்ள குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

### கோருகிறார் ராஜித சேனாரட்ன

கொழும்பு, டிசெ.9
கொவிட்19 பரவலால் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,
கொவிட்19 முதலாவது அலையின் போது வைரஸை கட்டுப்படுத்தும் செயற்பாட்டில், மிக மோசமாக செயற்படும் நாடுகளின் வரிசையில் 15 ஆவது இடத்தில் இலங்கை இருந்தது.
தற்போது கொரோனா வைரஸ் அச்சுறுத்தலை பாரதூரமாக எதிர்கொண்டுள்ள நாடாக இலங்கை மாறியுள்ளது என அமெரிக்காவின் தொற்றுநோய் தடுப்பு தொடர்பான தரப்படுத்தல் நிறுவனம் ஒன்று குறிப்பிட்டுள்ளது. தற்போது முழு நாடும் கொரோனா வைரஸ் பரவக்கூடிய இடமாக மாறியுள்ளது என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் கூறியுள்ளார்.
இந் நிலையிலும் அரசாங்கம் மக்களுக்கு எந்தவொரு சலுகையையும் வழங்காமல் உள்ளது. இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் நூற்றுக்கணக்கில் விமானங்களை, வெளிநாடுகளுக்கு அனுப்பி தமது நாட்டு பிரஜைகளை அழைத்து வருகின்ற போது இலங்கை வெறுமனே 15 விமானங்களை மாத்திரமே அனுப்பிக்கொண்டிருப்பது கவலைக்கிடமானது.
5 ஆயிரம் ரூபாவை மட்டுமே வழங்கிவிட்டு சமாளித்துவிட அரசாங்கம் முயற்சிக்கிறது.
அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு துணைபோகின்ற வகையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கமும் செயற்படுகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கோரிக்கைப்படி ஒரு குடும்பத்துக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க வேண்டியது அவசியம்- என்றார். (ந-இ)



## வியட்நாமியரை ஈர்த்த இலங்கை அப்பம்

கொழும்பு, டிசெ.9
வியட்நாமிலுள்ள இலங்கைக்கான தூதரகம் மற்றும் வியட்நாம் வெளிவிவகார அமைச்சின் ஏற்பாட்டில் சர்வதேச உணவு விழா வியட்நாம் ஹெனோயில் இடம்பெற்றுள்ளது. இந்த விழாவில் இராஜதந்திர தூதுக்குழுக்கள், சர்வதேச அமைப்புக்கள், ஹனோயிலுள்ள அரச சார்பற்ற அமைப்புக்கள், வியட்நாம் வெளிவிவகார அமைச்சு மற்றும் மாகாண ஆளுநர் அலுவலகம் உள்ளிட்ட நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டுள்ளனர்.
விழாவில் இலங்கையின் உணவு வகைகளை வியட்நாம் பிரஜைகள் மிகவும் விரும்பி உட்கொண்டதுடன், கொத்து ரொட்டி மற்றும் அப்பம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளமை விசேட அம்சமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-இ)

# ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை: விசாரணை ஜனவரிக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, டிசெ.9
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
குறித்த வழக்கு தொடர்பான இறுதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் வழக்கு நேற்று மட்டக்களப்பு மேல் நீதி மன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பயங்கரவாத தடுப்பு பிரிவினர் உரிய ஆவணங்களை கொண்டுவராததன் காரணமாக அரச தரப்பு சட்டத்தரணி விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் வழக்கு விசாரணை ஜனவரி 11ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது என சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.
2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டார். இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட ஆறு பேர் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் சட்டமா அதிபரின் ஒப்புதலின் பேரில் கடந்த மாதம் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# சனிப்பெயர்ச்சி பலன்கள்!



ராசி மண்டலத்தில் வலம் வரும்போது, சந்திரன் இருக்கும் ராசியிலிருந்து பன்னிரண்டிலும், சந்திரன் இருக்கும் ராசியிலும், அடுத்து சந்திரனில் இருந்து 2ஆவது ராசியிலும் இரண்டரை வருடங்கள் தங்கியிருந்து, பயணிப்பார் சனி.

ஏழரைச் சனி என்றதும் பயம்கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜென்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர். நம்மை வளர்த்து, நமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, இன்ப,துன்பங்களை வினைப்படி செயல்படுத்தி, வாழவைப்பவர்.

நிகழும் சார்வரி வருடம் மார்கழி 11ஆம் நாள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை இரவு 4:49 மணிக்கு (விடிந்தால் 27.12.2020) உத்திராடம் நட்சத்திரம் 2ம் பாதம் மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார் (வாக்கியப் பஞ்சாங்கப்படி). இந்தப் பெயர்ச்சியில் பன்னிரு ராசிகளுக்கும் அவர் அருளப்போகும் பலாபலன்கள் இங்கே தரப்படுகின்றன.



## துலாம்

அநியாயங்களைத் தட்டிக் கேட்பவர் நீங்கள். சனி பகவான் இப்போது 27.12.2020 முதல் 19.12.2023 வரை, சுக வீடான 4ம் வீட்டில் அமர்வதால் அலைச்சல் இருக்கும். எதையும் சமாளிக்கும் மனப்பக்குவத்தைப் பெறுவீர்கள்.

சொந்த ஊரை விட்டு இடம் பெயர்வீர்கள். செலவுகள் அதிகரிக்கும். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். வீடு வாங்குவதும் கட்டுவதும் இழுபறியாகி முடியும்.

அரசின் அனுமதி பெறாமல் கூடுதல் தளங்கள் அமைத்து வீடு கட்ட வேண்டாம். வழக்கில் தீர்ப்பு தாமதமாகும். அயல் நாட்டுப் பயணம் சாதகமாக அமையும். பிள்ளைகளின் நடவடிக்கையில் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.

29.03.2023 முதல் 24.08.2023 வரை சனி பகவான் அதிசாரத்தில் 5ம் வீடான கும்ப ராசியில் சென்று அமர்வதால் பிள்ளைகளால் செலவு, மன உளைச்சல், டென்ஷன் வரக்கூடும். கர்ப்பிணிப் பெண்கள் எதிலும் கவனத்துடன் செயற்படவும்.

சனி பகவான் உங்கள் ராசியைப் பார்ப்பதால் சோர்வு, களைப்பு வந்து நீங்கும். அவ்வப்போது கோபப்படுவீர்கள். சனி பகவான் உங்களின் 6ம் வீட்டைப் பார்ப்பதால் பணவரவு அதிகரிக்கும்.

**சனி பகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

உங்களின் பாதகாதிபதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரத்தில் 27.12.2020 முதல் 27.12.2021 வரை சனிபகவான் செல்வதால், தந்தையாருக்கு மருத்துவச் செலவுகள், அவருடன் கருத்து மோதல்கள் வரும். பாகப் பிரிவினையால் பிரச்சனைகள் வந்து நீங்கும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். அரச காரியங்களில் அலட்சியம் வேண்டாம். இதற்கிடையில் 11.05.2021 முதல் 26.09. 2021 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால் நன்மை பிறக்கும்.

உங்களின் ஜீவனாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 28.12.2021 முதல் 26.01.2023 வரை சனி பகவான் செல்வதால் பணப் புழக்கம் அதிகரிக்கும். நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். பெரிய பதவிகள் தேடி வரும். தடைப்பட்ட திருமணம் கூடி வரும். 25.05.2022 முதல் 09.10. 2022 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால், அலுவலகத்தில் சிறு பிரச்னைகள், உறவினர்களின் இழப்பு வரக்கூடும்.

உங்களின் தனசப்தமாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 27.01.2023 முதல் 19.12.2023 வரை சனி பகவான் செல்வதால், வாழ்க்கைத் துணைவர் வழியில் ஆதாயம் உண்டு. சொத்துச் சேர்க்கையுண்டு. சகோதரர் வலிய வந்து பேசுவார். 27.06.2023 முதல் 23.10.2023 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால் வாழ்க்கைத் துணைவருடன் மோதல்கள் அதிகரிக்கும். செலவினங்கள், வாகனப் பழுது வந்து நீங்கும். சிலர் வீடு மாற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும்.

**இல்லத்தரசிகளே!** உடல் எடையைக் குறைக்க பட்டினி கிடக்காதீர்கள். நகை சேரும். அலுவலகம் செல்லும் பெண்களே, சக ஊழியர்களில் நல்லவர்கள் யார் என்பதை உணர்வீர்கள்.

**வியாபாரிகளே!** போட்டிகள் அதிகரிக்கும். மற்றவர்களை நம்பி பெரிய முதலீடுகள் செய்ய வேண்டாம். அயல்நாட்டுத்தொடர்புடைய நிறுவனங் கள் மூலம் விபரீத லாபம் உண்டாகும்.

**உத்தியோகத்தர்களே!** சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். பணிகளை முடிப்பதில் அலட்சியம் காட்டாதீர்கள். மேலதிகாரிகளுடன் பிரச்னை வேண்டாம். அலுவல ரகசியங்களை வெளியிட வேண்டாம். சக ஊழியர்களுடன் ஈகோ பிரச்னைகள் வந்து நீங்கும். சிலர், உங்களை வழக்கில் சிக்க வைக்க சிலர் முயல்வார்கள். கடின உழைப்பால் பதவி உயர்வு, சம்பள உயர்வு பெறுவீர்கள். கணினித் துறையினருக்கு பார்வைக் கோளாறு, தசைப் பிடிப்பு நீங்கும். புதிய சலுகைகள் கிடைக்கும்.

**பரிகாரம்:** சனிக்கிழமைகளில் அனுமனை வழிபடுவதால் பன்மடங்கு பலன் கிடைக்கும். ஏழைகளுக்கு பொருளாதார உதவி செய்யுங்கள்; மகிழ்ச்சி பெருகும்.

# யூபிலி வருடத்தில் பத்திமா மாதா யாத்திரைத்தலம்



ச.யூட் கெமில்டன்

பத்திமா கிரி என்று அழைக்கப்பட்ட, நூற்றுக்கணக்கான பக்தர்கள் வந்து அருள் வரங்கள் பெற்றுச் செல்லும் பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னையின் யாத்திரைத்தலம் இன்று 75 ஆண்டு நிறைவு யூபிலியை நினைவுகூருகின்றது.

பண்டத்தரிப்பு பங்கு, சில்லாலைப் பங்கின் ஒரு பகுதியாக இருந்த காலத்தில், 1945 ஆம் ஆண்டு பங்குத்தந்தையாக இருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அருட்தந்தை ஹென்றி ஜெலானின் முயற்சியால் தலம் உருவாக்கப்பட்டது.

அன்னை மீது கொண்ட தீராத அதீத பக்தியால் கிடைத்த இறைதூண்டலால், அன்னை மரியாளுக்கு பண்டத்தரிப்பில் ஒரு ஆலயத்தைக் கட்டி, இலங்கை வாழ் மக்கள் அனைவருக்குமான ஒரு யாத்திரைத்தலத்தை உருவாக்கவேண்டுமென்று அவர் ஆவல் கொண்டார்.

அவரது விருப்பத்தை ஏற்றுக்கொண்ட அப்போதைய யாழ்.மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு து.யுகியோமர் ஆண்டகை, தனது முழு ஆதரவையும் வழங்கினார். ஆயரது ஆதரவையும், ஒப்புதலையும் பெற்ற அருட்தந்தை ஜெலான் அடிகளார், பல உபகாரிகளின் உதவியோடு மரியன்னைக்கு ஒரு ஆலயம் பத்திமா கிரியிலே அமைப்பதற்கு முடிவெடுத்தார்.



முதற்கட்டமாக ஓலைக் கொட்டில் அமைத்து, ஏற்கனவே மடுத்திருப்பதியில் 6 ரூபாவுக்கு வாங்கி வந்து தன்னோடு வைத்திருந்த சிறிய புதிய சுரூபத்தை, சில்லாலையிலிருந்து மிகப்பிரமாண்ட மான ஊர்வலத்தில் கொண்டு வந்து, ஆலயத்தில் நிறுவினார். அந்த நாளிலேயே, அதாவது அமல உற்சவ அன்னையின் பெருவிழாவுக்கு அடுத்த நாளாகிய மார்கழி 9 ஆம் திகதி (1945) மாலையில் முதல் திருவிழாவையும் கொண்டாடினார்.

அதன் பின்னர் பக்தர்களின் தொகை பெருகவே, புதியதொரு ஆலயமும் பத்திமா மாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. தற்போது பல யாத்திரிகர்களுக்கு இறைவனின் அருள்வரங்களை வழங்கும் பெயர் போன பண்டத்தரிப்பு பத்திமா மாதா யாத்திரைத் தலமாக யாழ்.மறைமாவட்டத்தில் சிறந்து விளங்குகின்றது.

பத்திமா அன்னையின் இறுதிக்காட்சி நாளாகிய ஐப்பசி 13 ஆம் நாளன்று, பண்டத்தரிப்பு பத்திமா அன்னை யாத்திரைத்தலத்தின் 75 ஆவது ஆண்டாகிய சிறப்பு யூபிலி ஆண்டானது, மேன்மை தங்கிய யாழ் ஆயர் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் பழைய ஆலயத்தில் மாலைத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நினைவு கூரப்பட்டது.

திருப்பலியின் பின்னர் தற்போதைய பங்குத்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளாரின் கடுமையான உழைப்பால், யூபிலி ஆண்டு நிறைவாக அமைக்கப்பட்ட, ஐந்து அறைகள் கொண்ட 'யாத்திரிகர்கள் தங்குமிடமும்' ஆயரால் திறந்து வைக்கப்பட்டது. ஆயரின் முழுமையான ஊக்குவிப்பால் வளர்ந்து வருகின்ற இந்த யாத்திரைத்தலம் இன்றும் ஆயிரக்கணக்கான பக்தர்களை இறைவன் பால் ஈர்க்கும் என நம்புகிறேன்.

# தேங்குகின்றது வெள்ளம்; மக்களே மிக அவதானம்

## டெங்கு அச்சநிலை என தென்மராட்சியில் அறிவிப்பு

**சாவகச்சேரி, டிசெ. 9**

**தென்மராட்சி பிரதேசத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் மழை வெள்ளம் தேங்கிக் காணப்படுவதால் டெங்கு ஏற்படாமல், தடுக்க மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: நீர் மூன்று தினங்களுக்கு மேல் ஓரிடத்தில் காணப்பட்டால் டெங்கு நுளம்பு பல்கிப் பெருக வாய்ப்புள்ளது. பிரதேசத்தில் பெய்துவரும் மழை வெள்ளம் வழிந்தோட பல நாள்கள் செல்லும் என எதிர்பார்க்கப்படுவதால் மக்கள் விழிப்புடன் செயற்பட்டு தம்மைத்தாமே பாதுகாக்க வேண்டும்.

காய்ச்சல் ஏற்பட்டால் தாமதிக்காமல் அருகில் உள்ள அரச மருத்துவமனைகளுக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டும் - என்றார். (ம-9)

## முட்கொம்பன் – கிளிநொச்சி வீதியை சீரமைக்க கோரிக்கை

**கிளிநொச்சி, டிசெ.9**

**பூநகரி - முட்கொம்பனில் மக்கள் குடியேறிய பின்னரும், முட்கொம்பனில் இருந்து ஸ்கந்தபுரம் ஊடாக கிளிநொச்சி செல்லும் வீதி இதுவரை சீரமைக்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் தெரி வித்ததாவது;

சுமார் 6 கிலோமீற்றர் தூரம் வரை வீதியின் நடுவே பள்ளங்கள் காணப்படும் நிலையில் மழைகாலத்தில் பள்ளங்களில் நீர் தேங்குகின்றன. சேறும் சகதியுமாக போக்குவரத்து.செய்யமுடியாத நிலையில் அந்த வீதி காணப்படுகிறது. முட்கொம்பன், கண்ணகைபுரம் பகுதி மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக கிளிநொச்சி செல்வதற்கு இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர். நாளொன்றுக்கு மூன்று முறை அரச பஸ்களும், தனியார் பஸ்களும், இந்த வீதி வழியாக யாழ்ப்பாணம் - கிளிநொச்சி சேவையில் ஈடுபட்டு வந்தன. எனினும் வீதி வழியாகப் பஸ்கள் பயணிக்க இயலாததை காரணம் காட்டி தற்போது தனியார் பஸ்கள் சேவையை நிறுத்தியுள்ளன.

தற்போது அரச பஸ்களும் வீதியில் புதையும் நிலையில் வீதி காணப்படுகிறது. எனவே அந்த வீதியை சீரமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர். (ஜ-ரி1)

## விமான நிலையம் மீண்டும் திறப்பது நாட்டுக்கு ஆபத்தே!

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை



கொழும்பு, டிசெ.9

உரிய பொறிமுறைகளை மேற்கொள்ளாது நாட்டை மீளத்திறப்பது ஆபத்தானது என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரசு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகளுக்காக மீள விமான நிலையத்தைத் திறக்க எதிர்பார்த்துள்ள நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டத்தை அதிகாரிகள் கண்காணிப்பது மிக முக்கியமானது எனவும் அச்சங்கம் குறிப்பிட் டுள்ளது. விமான நிலையத்தை மீளத்திறப்பது தொடர்பில் அரசு நீண்டகாலமாக ஆராய்ந்து வருகின்றது.

உரிய நடைமுறைகளுடன் அதை மீளத்திறப்பதில் எந்தவொரு சிக்கலும் இல்லை என பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ற-இ)



## வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

திருகோணமலை, டிசெ.9

தம்பலகமம் ஜெயபுர பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என தம்பலகமம் பொலிஸார் தெரிவித்தனர். திருகோணமலையில் இருந்து கந்தளாய் நோக்கி புறப்பட்ட சீமெந்து லொறியும் திருகோண மலை நோக்கி புறப்பட்ட முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணித்த புத்தளத்தைச் சேர்ந்த 34 மற்றும் 38 வய துடைய குடும்பஸ்தர்கள் இருவரே விபத்தில் உயிரிந்துள்ளனர். லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (வ-இ)

## கண்டி – பன்விலையில் முதலாவது தொற்றாளர்

கண்டி, டிசெ.9

கண்டி பன்விலை அங்கம்மன பன்விலவத்த பிரதேசத்தில் முதலாவது கொவிட் தொற்றாளர் இனங்காணப்பட்டுள்ளார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள சுப்பர் லங்கா எனும் தனியார் நிறுவனத்தில் இவர் தொழில் புரிந்து வந்துள்ளார், இங்குள்ளவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்ட நிலையில் ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனையின் பின்னர் கடந்த மாதம் 30ஆம் திகதி பஸ்ஸில் வீடு திரும்பியுள்ளார். . இவர் (வயது55) பன்விலை மருத்துவ அதிகாரி காரியாலயத்துக்கு தான் ஊருக்கு வருகை தந்த விடயத்தை அறிவித்துள்ளார். பன்விலையில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த இவருக்கு, கடந்த 4 ஆம் திகதி பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையில் இவர் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார். இவரது வீட்டிலுள்ள நால்வரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ந-இ)

## அறிவித்தல் பலகையில் தேசிய மொழி புறக்கணிப்பு!

**கல்கிஸை, டிசெ.9**

**கல்கிஸை ரயில் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள அறிவித்தல் பலகையொன்று ஆங்கில மொழியிலும் சீன மொழியிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான புகைப்படமானது சமூக வலைத்தளத்தில் பதிவிடப்பட்ட பின்னரே அறிந்து கொண்டேன் என்று இலங்கை ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் டிலந்த பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.**

**இந்த அறிவிப்புப் பலகை தான் பொதுமுகாமையாளராக வருவதற்கு முன்னரே பொருத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.**

**அத்துடன் இந்த அறிவிப்பு பலகை பொருத்தியமை குறித்து, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)**

## ஆயிரத்தை தொடுகின்றன தேசிய பாடசாலைகள்

### அங்கீகாரம் வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, டிசெ.9

தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக உயர்த்த கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் முன்வைத்த திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச தலைமையில் ஒன்லைன் மூலம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.


அதன்படி, அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய இந்த திட்டத்தை மூன்று கட்டங்களாக செயற்படுத்த கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

முதல் கட்டமாக தேசிய பாடசாலைகள் இல்லாத 123 பிரதேச செயலக பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலையை தேசிய பாடசாலையாக உருவாக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

மேலும், அடையாளம் காணப்பட்ட 673 பாடசாலைகள் இரண்டாம் கட்டத்தின் கீழ் தேசிய பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அத்துடன் தற்போதுள்ள 373 தேசிய பாடசாலைகளை மூன்றாம் கட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யவும் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. (ந-இ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
25 • 07 • 1948

மறைவு
12 • 11 • 2020

## செல்லையா திசவீரசிங்கம்

(ஜெயம் - சுப்பர் மாக்கட். நெல்லியடி)

கடந்த 12.11.2020 அன்று எமது தந்தையின் இறப்பு செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கு எமது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 11.12.2020 அன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

பரியந்தர் வளவு, வதிரி,
கரவெட்டி.
077 392 7815

குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
18 • 01 • 1967



ஆண்டவன் அடியில்
08 • 11 • 2020

யாழ். அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும். சுவிஸ் Bern, கொக்குவில் கிழக்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் செல்லத்துரை கலாமோகன்

(Dipl. Masch.lng.FH - Swiss)

காலங்கள் கடந்தாலும் நின்னுயிர்
காற்றினில் கரைந்தாலும்
ஓவியமாயிருக்கும் உன்னிழல்
ஒளியிழந்து போனாலும்
குலவதுவான உன்னை
கூடிப்பிறந்த நாமும்
உடலில் சுமந்து உயிரைப் பகிர்ந்து
உருவம் கொடுத்த உன் அன்னையும்
என்றென்றும் மறவோம்

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும். தொலை பேசியூடாகவும். தொலைநகல். மின்னஞ்சல்.சமூக வலைதளங்கள் ஆகியவை மூலமாகவும். எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். மலர்வளையங்கள் . மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும். உற்றார். உறவினர். நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளை யும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

72/50, பனிக்கர் ஒழுங்கை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தாய், சகோதரிகள்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**09.12.2020**

## அமரர் நாகலிங்கம் சிவகுருநாதன்


**(அப்பு)**

(பிரபல புகையிலை வர்த்தகர் - மண்டைதீவு)

**பிறப்பு** 12.12.1944

**இறப்பு** 02.12.2018

**திதி: கார்த்திகை மாத தேய்பிறை தசமி**



**அன்புள்ள அப்பா!**

வெளிச்சத்தில் நாங்கள் வாழ
விழிகளில் விளக்கு வைத்து
உடலை உரமாக்கி உதிரத்தை வியர்வை துளி ஆக்கி
கரத்தை சிறகாக்கி நதிபோல் நடந்தீர்கள்
பாசத்தின் நிறை குடமாய்
பரிவுடன் எமை வளர்த்து
எட்டுப்படி நாங்கள் ஏற
ஏணியாய் இருந்தீர்கள்
இற்று விடா இனி வாழ்வை
எமக்கு அழித்தவரே
எம்மை விட்டு அற்று போனது ஏன்
எங்கள் ஆதவனின் ஒளி இழந்து
அழகு வதனம் நிழல் படமாகி
உங்கள் நினைவைச் சுமந்து
ஆண்டு இரண்டு அப்பாவின் அன்பை இழந்து
உங்கள் மூன்று எழுத்து (அப்பு)
காலமெல்லாம் துணையாக இருந்து
எம்மை ஆளும் அப்பா
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனிடம் கை ஏந்துகின்றோம்.

இறம்பைக் குளம்
வவுனியா.

குடும்பத்தினர்.

# கேள்வி அறிவித்தல்
# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
# 2020

01. தலைவர்,பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர் களிடமிருந்தும், வழங்குநர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி வேலைகளுக்காகக் கோருப்படுகின்றது.

02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019 ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமா காணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமை யளிக்கப்படும்.

03. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை(Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 0212240017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 09.12.2020 தொடக்கம் 22.12.2020ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து 09.12.2020 திகதியிலிருந்து 22.12.2020ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/- (வரிநீங்கலாக)இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 23.12.2020 ம் திகதி மு.ப 9.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

09. கோரப்பட்ட வேலைகளின் கேள்விகளுக்கு கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49(நாற்பத்தொன்பது – 10.02.2021) நாட்களாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொர். இல | வேலைவிபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை ரூபாவில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம்(வீதி) | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 1 | உசத்தியோடை இந்து மயான கிறிஸ்தவ மயான இடையிலான வீதி மற்றும் கிறிஸ்தவ மயான உள்ளக வீதி, ஏழாலை வடக்கு காளிகோவில் வீதி 2ம் குறுக்கு வீதி, மல்லாகம் புன்னாலைக்கட்டுவன் கிளை வீதி (சிவகுரு கடை, அருகாமை) - ஏழாலை | 1,498,871.50 | | | 15,000.00 | 10.03.2021 |
| 2 | அபிராமி அம்மன் வீதி (புளியங்கிணற்றடி புன்னாலைக்கட்டுவன் உப வீதி), சைவமகாஜனா குறுக்கு வீதி, மடத்துவாசல் வீதி 1ம் குறுக்கு வீதி, கண்ணகைஅம்மன் வீதி - உசத்தியோடை | 1,474,011.94 | | | 15,000.00 | 10.03.2021 |
| 3 | குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்களகத்திற்கு அருகிலுள்ள கிளை வீதி, கற்கரைப்பிள்ளையார் குறுக்கு வீதி, மல்லாகம் புன்னாலைக்கட்டுவன் குறுக்கு வீதி (காசிவாசி செந்தில்நாதர் அருகாமை), ஞானகலா சனசமூக நிலைய 1ம் குறுக்கு வீதி – புன்னாலைக்கட்டுவன் | 1,859,745.32 | | | 19,000.00 | 10.03.2021 |
| 4 | புத்தூர் சுன்னாகம் 2ம் குறுக்கு வீதி, திடற்புலம் 1ம் குறுக்கு வீதி, ஐயனார் வீதி 1ம் குறுக்கு வீதி புனரமைப்பு, ஈவினைப் பிள்ளையார் வீதி மீள்தாரிடல் - ஈவினை | 1,513,985.12 | 60 நாட்கள் | C5 –C9 வீதிப் புனரமைப்பு | 15,500.00 | 10.03.2021 |
| 5 | புளியங்கிணற்றடி புன்னாலைக்கட்டுவன் 2ம்குறுக்கு வீதி (துர்க்கா ஸ்ரோஸ் (முன்), பிரதான கொலனி நாகதம்பிரான் வீதி, மாப்பனார் 2ம் குறுக்கு வீதி, உயிலடி 2ம் குறுக்கு வீதி, விவசாய குறுக்கு வீதி மிகுதி வேலை – ஏழாலை, ஒன்றியத்திற்கு அருகாமையுள்ள வீதி – மயிலங்காடு | 1,935,610.76 | | | 20,000.00 | 10.03.2021 |
| 6 | சூராவத்தை முத்துமாரி அம்மன் வீதி சூராவத்தை முத்துமாரி அம்மன் வீதி 3ம் குறுக்கு வீதி - சூராவத்தை. | 1,394,323.00 | | | 14,000.00 | 10.03.2021 |
| 7 | லிங்கம் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு முன்னாலுள்ள வீதி (Assembly of god lane) – சுன்னாகம், தேவராணை வீதி 4ம் குறுக்கு வீதி, ஆர்க் வீதி – கந்தரோடை. | 1,155,392.94 | | | 13,500.00 | 10.03.2021 |
| 8 | அம்பலவாணர் 2ம் குறுக்கு வீதி, சாமுவேல்மான் 2ம் ஒழுங்கை – சுன்னாகம். | 1,457,919.32 | | | 15,000.00 | 10.03.2021 |
| 9 | 9ம் கட்டை முன்வீதி, சபாபதிப்பிள்ளை 4ம் ஒழுங்கை – சுன்னாகம். | 890,899.46 | | | 9,000.00 | 10.03.2021 |
| 10 | கதிரமலை வீதி (மின்சார நிலைய தெற்கு வீதி), கதிரமலை குறுக்கு ஒழுங்கை (இடது பக்க 2ம் ஒழுங்கை) – சுன்னாகம். | 1,135,737.05 | | | 12,000.00 | 10.03.2021 |
| 11 | புகையிரதப் பாதைக்கு முன்னாலுள்ள வெள்ளவாய்க்கால் வீதி – சுன்னாகம். | 1,155,587.03 | | | 12,000.00 | 10.03.2021 |
| 12 | APC பின் ஒழுங்கையிலுள்ள சேச் பின் ஒழுங்கை, குட்டிப்போக்கன் 2ம் ஒழுங்கை – உடுவில் | 637,588.00 | | | 6,500.00 | 10.03.2021 |
| 13 | பண்ணைமுன் வீதி மிகுதி வேலை, கலாஜோதி வீதி - இணுவில் | 1,059,849.55 | | | 11,000.00 | 10.03.2021 |
| 14 | மல்வம் 3ம், 13ம், 14ம் ஒழுங்கை, மாடன் வைரவர் வீதி – மல்வம், ரான்ஸ்பொமர் 2ம்,3ம்,4ம் குறுக்கு வீதி – உடுவில். | 1,616,917.40 | 60 நாட்கள் | C5 –C9 வீதிப் புனரமைப்பு | 16,500.00 | 10.03.2021 |
| 15 | இணுவில் மத்திய கல்லூரி மைதான வீதி (கொங்கிறீற்), பரமானந்த வள்ளியம்மை வீதி, வட்டுவினி குறுக்கு வீதி மிகுதி வேலை - இணுவில் | 1,684,772.10 | | | 17,000.00 | 10.03.2021 |
| 16 | புளியடிவைரவர் 1ம், 2ம், 5ம் குறுக்கு வீதி, மல்வம் மயான குறுக்கு வீதி – உடுவில், மல்வம் 12ம் குறுக்கு வீதி – மல்வம். | 1,636,600.00 | | | 16,500.00 | 10.03.2021 |
| 17 | மாரியப்புலம் 1ம் குறுக்கு வீதி, தாவடி மயான 3ம் குறுக்கு வீதி, கிளுவங்கட்டை 1ம் குறுக்கு வீதி | 1,845,451.24 | | | 19,000.00 | 10.03.2021 |
| 18 | பத்தானை வீதியினையும் சங்கடத்தார் வீதியினையும் இணைக்கும் முருகமூர்த்தி கோவில் வீதி மிகுதி வேலை மற்றும் ஐந்துவேம்படி வீதி மிகுதி வேலை | 1,069,191.90 | | | 11,000.00 | 10.03.2021 |

11. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 16.12.2020ம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

**க.தர்ஷன்,**
தவிசாளர்
பிரதேசசபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்குபிரதேசசபை
சுன்னாகம்.

09.12.2020

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **கந்தையா குமாரசாமி**



தோற்றம் 20 . 09 . 1930

மறைவு 20 . 11 . 2019

திதி: கார்த்திகை மாத அபரபட்ச நவமி

அப்பா உங்கள் அன்பும் அரவணைப்பும் இன்றி
அப்பா அப்பா என்று அலறி துடிக்கின்றோம்
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
நீங்கள் தான் எங்கள் அப்பாவாக வரவேண்டுமென்று
இறைவனை வேண்டுகின்றோம்.

இணுவில் தெற்கு,
இணுவில்.
(பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்)

குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 14 . 06 . 1924



இறப்பு 09 . 11 . 2020

அமரர் கலாபூஷணம்
**கணபதிப்பிள்ளை சிவகாருணியம்**

அன்பாலும் பாசத்தாலும் எமை.
அரவணைத்து வளர்த்தீரே
ஆறுதல் கூறி என்னையும்
காத்தீரே அப்பா
கண்காணா தூரம் எமை விட்டு
கனவாய் போனீரே
காலம் மீண்டும் உங்களை காண
குழந்தையாய் குடும்பத்துள் வாருங்கள்
- காத்திருப்போம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று நடைபெறுகின்றது.

126, அரசடி வீதி,
(யா/இந்து மகளிர் கல்லூரி முன்பாக)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**கதிரமலை பூமணி**

முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரமலை பூமணி நேற்று (08.12.2020) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை முத்தம்மாவின் அருமை மகளும், காலஞ்சென்ற தம்பையா செல்லம்மா வின் மருமகளும், கதிரமலை அவர்களின் பாசமிகு மனை வியும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் தவமணியின் சகோதரியும், தியாகராஜா சிவகுமார், கமலாதேவி, லலிதா செல்வரட்ணத்தின் மைத்துனியும், ராதாங்களின் அன்புத் தாயாரும், இந்திராணியின் மாமியாரும், நிவேஷன், லஹித்தியாவின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2020) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

63, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
20 . 08 . 1958




விண்ணில்
07 . 12 . 2020

## திரு.அப்பையா சிறிதரன்
## (Child First uk நிறுவன தலைவர்)

விசுவமடு மத்தி சன சமூக நிலைய வளாகத்தில்
அமையப்பெற்றுள்ள திறன் விருத்தி நிலையத்தின்
உருவாக்கத்திற்கும் அதன் செயற்பாடுகளிற்கும்
நிதி வழங்கி வரும் Child First uk நிறுவனத்தின்
தலைவரும், கொடையாளருமாகிய
திரு.அப்பையா சிறிதரன்
அவர்களின் பிரிவுத்துயர் அறிந்து வேதனை அடைவதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
பிரார்த்தனை செய்வதுடன்
இருகரம் கூப்பி அஞ்சலிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

**திறன்விருத்தி நிலையம்**
**விசுவமடு மத்தி சன சமூக நிலையம்**
**விசுவமடு.**

# மரண அறிவித்தல்



## துரைராஜா ஸ்ரீரூபன்

யாழ். வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Bussy-Saint-Georges ஐ வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா ஸ்ரீரூபன் அவர்கள் 01.12.2020 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற துரைராஜா(துரை), பரமேஸ்வரி(தங்கமணி) தம்பதிகளின் அன்பு மகனும், ஆசாரி பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பவளம் அவர்களின் பாசமிகு அன்புக் கணவரும், சுபாங்கி, பிரணவன், பிரூஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஞானேஸ்வரி (ஞானம்-பிரான்ஸ்), குணசேகரம் (பிரான்ஸ்), சரோஜாதேவி (சுவிஸ்), ஆனந்தரூபன் (ரூபன் -சுவிஸ்), விஜயராணி (இலங்கை), தவசீலன் (பிரான்ஸ்), சுகந்தினி (இலங்கை), மாலினி (மாலா- பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுந்தரலிங்கம் (தேவன்-பிரான்ஸ்), சிறிரஞ்சனி (பிரான்ஸ்), மனோராஜா (சுவிஸ்), சிவகுமாரி (சுவிஸ்), வாமதேவன் (இலங்கை), கார்த்திகா (பிரான்ஸ்), சசிக்குமார் (இலங்கை), காந்தரூபன் (பிரான்ஸ்), அன்னராணி (இலங்கை), புஷ்பலீலா (இலங்கை), செல்வராசா (சொக்கன் -பிரான்ஸ்), கலாதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2020) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: துரைராஜா பரமேஸ்வரி (தாய்)**
**விஜயராணி வாமதேவன் (சகோதரி)**
**021 222 7891**

# மருதங்கேணியில் ஒதுங்கிய சடலம்!

யாழ்ப்பாணம், டிசெ.9

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் சடலம் ஒன்று நேற்றுப் பிற்பகல் கரை ஒதுங்கியுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் இனங்காண முடியாத வகையில் உருக்குலைந்து காணப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-6.26)

# எவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ் மருத்துவபீட ஆய்வுகூடம் என்பவற்றில் நேற்று மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில் எவருக்கும் தொற்றில்லை என்று உறுதி செய்யப்பட்டது. (ம)

*கொழும்பை...*

அபாயமுடையது என்று சுகாதாரத் தரப்பினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கொழும்பில் மூன்றாம் அலையின் பின்னர் நேற்று வரை 11 ஆயிரத்து 700 க்கும் மேற்பட்டோர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

அதன்படி கொழும்பு 1 தொடக்கம் 15 வரையான பகுதிகளிலும், வெலிக்கட, அங்கொட, அத்திட்டிய, பொரல்லஸ்கமுவ, தெஹிவளை, கொத்தொட்டுவ, மடபத்த, புவக்பிட்டிய, இராஜகிரிய மற்றும் தலவத்துகொட ஆகிய பகுதிகளில் இவ்வாறு தொடர்ந்தும் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நேற்று கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 703 பேரில் 371 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் பொரளைப் பகுதியில் 192 பேரும், கொம்பனி வீதியில் 32 பேரும் தெமட்டகொட பகுதியில் 32 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஜ-22)

PEOPLE'S BANK

## கேள்விப்பத்திர அறிவித்தல்
## மக்கள் வங்கி
### சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ். பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ்.ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ். பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் ஆகிய கிளைகளிலும் கொக்குவில், மானிப்பாய், காங்கேசன்துறை, மல்லாகம், உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, பலாலி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, மருதனார்மடம், புலோலி ஆகிய சேவை நிலையங்களிலும் யாழ்.பிராந்திய முகாமையாளர் விடுதி மற்றும் யாழ். பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 1000/-ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 2020 மார்கழி மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3.00 மணிவரை எந்தவொரு வார நாளிலும் மு.ப 9.00 - பி.ப 3.00 மணிவரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப்பத்திரக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொடர்புகொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களைப் பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2020 மார்கழி மாதம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல: 82, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Fax - 021-2222602
E- mail: jafrho@peoplesbank.lk

## தேவை

காவலாளியும் மில்வேலை தெரிந்தவர்களும் தேவை.

மாப்பியன் மில் சுதுமலை மானிப்பாய். 077 772 2215

## பெயர் மாற்றம்

**வனஜாறுாபன்** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **வனஜரூபன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **வனஜரூபன்** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

## தவறிவிட்டது

ஏரம்பமூர்த்தி பிரபாகரன் ஆகிய எனது தே.அ.அ.இல. 197822803928, வாகன அனுமதிப் பத்திரம் ( B2859071D ), வேலை அ.அ., என்பன மனோகரா சந்திக்கும் கோண்டாவில் இராமகிருஸ்ணா லேனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொ.பே.எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**077 6139 259**

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையில் ஆய்வுகூட உதவியாளராக கடமையாற்றும் **திரு.க.ராதாங்கன்** அவர்களின் தாயார்

**திருமதி**
**கதிரமலை பூமணி**

அவர்கள்
08.12.2020 (செவ்வாய்க்கிழமை)
இறைபதம் எய்தினார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர்கள்**
**விலங்கியல்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## கேள்வி அறிவித்தல்
## சபைநிதி வேலைத் திட்டம் - 2020
## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் குறிப்பிட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக கோருகின்றார்.

01. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
02. கேள்விபெறத்தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் இக்ராட் (ICTAD) பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
03. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர்/செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் (தொலைபேசி: 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை 09-12-2020–22-12-2020 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி, கொடிகாமம் எனும் இடத்திலிருந்து 09-12-2020ஆம் திகதியிலிருந்து 22-12-2020 ஆம் வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு 22.12.2020 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்விப் பிணையானதுகேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று) நாட்கள் 22-02-2021 வரையும் செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொடர் இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (Without Vat) (ரு) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/41 (12)/2/C.F/ 2020/01 | சோலர் (Solar) கொள்வனவு– தலைமை அலுவலகம் | 3.0 | 60 நாட்கள் | அங்கீகரிக்கப் பட்டதரம் | 30,000.00 | 21-03-2021 |
| 2 | NP/14/41 (12)/2/C.F/ 2020/02 | வளிச்சீராக்கி (Air Conditioner பொருத்துதல்– தலைமை அலுவலகம் | 1.21 | 60 நாட்கள் | அங்கீகரிக்கப் பட்டதரம் | 13,000.00 | 21.03.2021 |
| 3 | NP/14/41 (12)/2/C.F/ 2020/53,76 | ஊரியான் சுடுகாடு புனரமைப்பு மிருசுவில் சந்தை மலசலகூடம் அமைத்தல் | 0.429 | 30 நாட்கள் | C9/ C8 | 5,000.00 | 21.03.2021 |
| 4 | NP/14/41 (12)/2/C.F/ 2020/62 | ஊரியான் வீதி அமைத்தல் | 1.85 | 60 நாட்கள் | C9/ C8 | 19,000.00 | 21.03.2021 |
| 5 | NP/14/41 (12)/2/C.F/ 2020/77 | கழிவு கொட்டும் இடத்திற்கான சுற்று மதில் மற்றும் கேற் அமைத்தல், - தனங்கிளப்பு | 0.924 | 90 நாட்கள் | C9/ C8 | 10,000.00 | 21.03.2021 |

09. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 15-12-2020 திகதிமாலை 14.30 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

தலைவர்
பெறுகைக்குழு,
சாவகச்சேரிபிரதேச சபை,
கொடிகாமம்.
09-12-2020

### டிசெம்பர்...

நேற்று அதிகாலை 8.30 மணி வரையில் 622.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்த ஆண்டு ஆயிரத்து 463.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. கடந்த 15ஆண்டுகளில் 2015ஆம் ஆண்டே அதிகூடிய ஆண்டு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. ஆயிரத்து 838.9 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது. நிஷா புயல் ஏற்பட்ட 2008ஆம் ஆண்டு ஆயிரத்து 776.7 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. (ஒ.த.5)

### குளோரின்...

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கிணறுகளின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதுடன், வெள்ள நீரும் அவற்றுடன் கலந்துள்ளது. அதனைக் குடிப்பதால் வயிற்றோட்டம் நெருப்புக் காய்ச்சல் என்பன ஏற்படும் என்று எச்சரித்துள்ள சுகாதாரத்துறையினர் குளோரினை அதற்குரிய அளவுகளில் இடுமாறு வலியுறுத்தியுள்ளனர்.

2 ஆயிரத்து 500 லீற்றர் தண்ணீருக்கு 50 கிராம் குளோரின் இடப்பட வேண்டும். தற்போது வெள்ளம் தேங்கிய கிணறுகளில் அண்ணளவாக 30 ஆயிரம் லீற்றர் தண்ணீர் வரையில் காணப்படலாம் என்று தெரிவிக்கும் சுகாதாரத் துறையினர் அதற்கு ஆகக் குறைந்தது 600 கிராம் குளோரினாவது இடப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். (ஒ.5)

### மழை வெள்ளத்தால்...

துள்ள யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா, மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெள்ளம் தேங்கி நிற்பதால் பல நோய்கள் ஏற்படலாம். வெள்ளத்தின் ஊடாக மக்கள் பலர் நடந்து திரிகின்றனர். இதனால் தோல் புண் ஏற்படலாம். சேறுகளின் ஊடாக நடப்பதால் சேற்றுப் புண் வரலாம். எனவே சிறுவர்கள் உள்ளிட்ட அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும்.

நீர் மாசடைந்துள்ளதால் அதனை கொதிக்க வைத்து பயன்படுத்தவேண்டும். இல்லாவிடின் வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல் என்பன வரலாம். எனவே கிணறுகளில் குளோரின் இடவேண்டும்.

வெள்ளம் காரணமாக வீடுகளில் கழிவுகள் தேங்கியுள்ளன. நுளம்புகள் பெரும்பாலும் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

சளி, காய்ச்சல், ஆஸ்துமா என்பனவும் அதிகம் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் நிலத்தில் படுப்பதன் காரணமாக, நிலம் ஈரமாக இருப்பதால் நாரி நோ ஏற்படவும் வாய்ப்புண்டு.

இவை எல்லாவற்றையும் விட விபத்துக்களும் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம்.

வெள்ள நீர் தேங்கி நிற்பதால் கால்வாய்கள், கிடங்குகள், கைவிடப்பட்ட கிணறுகள் என்பவற்றில் தவறி விழுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். எனவே இது தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டும், என்றார். (ஒ.5)

## 5 ஆண்டுகளில் வடக்கில் அபிவிருத்தி "ஜெட்" வேகம்

### நாமல் ஆருடம்

கொழும்பு, டிசெ.9

அடுத்த 5 ஆண்டுகளில் வடக்கு, கிழக்கில் பல அபிவிருத்தித் திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்படும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் அபிவிருத்திகளுக்காக அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டதென்றால் அது மஹிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில்தான் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

எங்களின் முன்னைய ஆட்சியில் எவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டனவோ அதேபோல் அடுத்த ஐந்து ஆண்டுகளில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் துரிதமாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் சுற்றுலாத்துறை மற்றும் கல்வித்துறையை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுப்போம் - என்றார். (எ-22)

# விதிமுறைகளை மீறி ரஷ்யாவில் தடுப்பூசி!



**மொஸ்கோ, டிசெ.9**
**ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் திட்டம் ஆரம்பமாகியுள்ளது. முதல் கட்டமாக மருத்துவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட நோய்த்தொற்று அபாயம் அதிகம் உள்ளவர்களுக்கு தடுப்பூசி போடப்படுகிறது.**

ரஷ்யா உருவாக்கியுள்ள 'ஸ்புட்னிக்-5 ' கொரோனாத் தடுப்பூசியைப் பொதுமக்களுக்குச் செலுத்தும் திட்டத்தை ஒரு வாரத்துக்குள் ஆரம்பிக்க வேண்டும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை இந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்காக மொஸ்கோவில் 70 கொரோனா தடுப்பூசி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாட்டில் கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் நான்கில் ஒரு பங்கினர் மொஸ்கோ நகரிலேயே உள்ளனர். ரஷ்யா உருவாக்கியுள்ள ஸ்புட்னிக்-5 கொரோனாத் தடுப்பூசி, உலக சுகாதார அமைப்பு நிர்ணயித்த பாதுகாப்பு, தர, செயல்திறன் பரிசோதனைக் கட்டங்களை முழுமையாகத் தாண்டுவதற்கு முன்னரே பொதுமக்கள் பயன்பாட்டுக்காக அந்த நாட்டு மருந்துகளை ஒழுங்காற்று அமைப்பு கடந்த ஓகஸ்ட் மாதம் அங்கீகரித்தது. (வ-இ)



## 52 ஆண்டுகளின் பின் ஆலங்கட்டி மழை

லெபனான் நாட்டின் தலைநகர் பெய்ரூட்டில் 52 ஆண்டுகளுக்கு பிறகு ஆலங்கட்டி மழை பெய்துள்ளது. பனி முழுவதுமாக படர்ந்ததில் வெள்ளை நிறத்தில் அந்த நாட்டு வீதிகள் காட்சியளிக்கின்றன. (வ-இ)

## இந்தியாவுக்கான சீன ஏற்றுமதி வீழ்ச்சி

பீஜிங், டிசெ.9
இந்தியாவுக்கான சீன ஏற்றுமதிகள் இந்த ஆண்டு கடுமையாக வீழ்ச்சி கண்டுள்ளன. இந்த ஆண்டு இந்தியாவுக்கு சீனாவின் ஏற்றுமதி 13 சதவீதம் குறைந்திருக்கிறது.
அதாவது கடந்த 11 மாதங்களில் 59 பில்லியன் டொலர் பெறுமதியில் சீனா ஏற்றுமதி செய்துள்ளது. ஆனால் இந்தியா கடந்த 11 மாதங்களில் சீனாவுக்கு 19 பில்லியன் டொலர் பெறுமதியில் ஏற்றுமதி செய்துள்ளது. இது 16 சதவீதம் அதிகம் ஆகும். அந்தவகையில் இரு நாடுகளுக்கு இடையே 78 பில்லியன் டொலர் அளவுக்கு வர்த்தகம் நடந்துள்ளது என சீன சுங்கத்துறை தெரிவித்துள்ளது. (வ-இ)

## மரண அறிவித்தல்

### திரு.இராசேந்திரம் இம்மானுவேல்



பிறப்பு 13.09.1935 இறப்பு 08.12.2020

இல.56/3, 5ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட திரு. இராசேந்திரம் இம்மானுவேல் நேற்று (08.12.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற செ.இராசேந்திரம் இ.செபமாலை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ், பீற்றர், பிலோமினா, அருளப்பா, மரியநாயகம் மற்றும் ஆரோக்கியநாதன், யோஜினாவின் (அவுஸ்திரேலியா) அன்பு சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2020) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**ம.டினேஸ்குமார் - பெறாமகன்**
**0777 060638**

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் சின்னத்துரை

## (பிரபல உருளைக்கிழங்கு வியாபாரி AS)



மண்கும்பானை பிறப்பிடமாகவும் இலக்கம் 121/1, அரசடி வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சின்னத்துரை (பிரபல உருளைக்கிழங்கு வியாபாரி AS) நேற்று (08.12.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சிவகாமி தம்பதியரின் அன்பு புதல்வரும், ஆறுமுகம் விசாலாட்சியின் பெறாமகனும், காலஞ்சென்ற நாகலிங்கம் நாகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் (சின்னமணி) அன்புக் கணவரும், சந்திரகுமாரின் அன்புத் தந்தையாரும், கிருஷாந்தியின் மாமனாரும், சௌந்தரம் காலஞ்சென்ற சின்னக்குஞ்சு (ராசம்மா), தருமலிங்கம், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, புவனேந்திரம், கந்தசாமி மற்றும் ராசேந்திரம், சின்னம்மா, பாலசிங்கம், நவரட்ணம், தையல்நாயகி, சற்குணானந்தன், வீரகத்திப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், வைத்திலிங்கத்தின் மருமகனும், காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம், பண்டா மற்றும் ராசமணி நேசமலர், இன்பமணி, பவளம், ராஜேஸ்வரி, காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் விஜயலட்சுமி, பிரபானந்தரூபி, புஸ்பராணி காலஞ்சென்றவர்களான பரமதேவன், பரமேஸ்வரி, துரைராசா மற்றும் கணேசலிங்கம், மகேஸ்வரி, சண்முகம் ஆகியோரின் மைத்துனரும், முகுந்தன், அருஷிகா, பிரணவன், மதுரிகா, அஸ்வினி ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2020) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மகன் - சி.சந்திரகுமார் (குமார்)**

## தமிழ் அரசியல்...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் காணொலி தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்றது. இதன்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தாம் வகிக்கும் அரசியல் நிலைப்பாட்டால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களையே அரசியல் கைதிகளென விளிக்கமுடியும். இலங்கையில் அரசியல் கைதிகள் இல்லை. எனவே, அரசியல் கைதிகளின் எண்ணிக்கை பூஜ்ஜியம், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் எண்ணிக்கையும் பூஜ்ஜியம் என்ற பதிலையே வழங்கமுடியும்.

இலங்கையில் கருத்து சுதந்திரம் இருக்கின்றது. அது அடிப்படை உரிமையாகவும் அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயத்தை மையப்படுத்தி எவரும் கைது செய்யப்பட்டு, தடுத்துவைக்கப்படவில்லை.

பயங்கரவாத குற்றச்சாட்டின் அடிப்படையில்தான் நீங்கள் கூறும் நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆக, அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்ற விடயம் ஆளுந்தரப்பில் ஏற்புடைய காரணியல்ல.

அதேவேளை, குற்றச்சாட்டுகளின் தன்மை அடிப்படையிலேயே கைதிகள் வகைப்படுத்தப்படுகின்றனர். எனவே, தமிழ்க் கைதிகள், முஸ்லிம் கைதிகள், சிங்களக் கைதிகள் என கைதிகளை இன ரீதியில் வகைப்படுத்தக்கூடாது. தண்டனை குறைப்பு, பொதுமன்னிப்பு என்று அனைத்து விடயங்களும் எல்லாக் கைதிகளுக்கும் பொருந்தும்என்றார். தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் உறுப்பினர்கள் கூட்டாக நீதி அமைச்சரை சந்தித்து கடந்த 5ஆம் திகதி மனுக் கையளித்திருந்தனர்.

இதன்போது நீதி அமைச்சர், அரசில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்தால், சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினரையும் அழைத்து இது பற்றிக் கலந்துரையாட முடியும் என்று அந்தச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டியிருந்தார் என, அதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது முகநூலில் பதிவிட்டிருந்தார். இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலின்போது தனது வாக்குறுதிகளில் ஒன்றாக, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையையும் கோத்தாபய ராஜபக்ச குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் அரசின் இணை ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஒ,5,44)

## 798....

798 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பேலியகொடை கொத்தணிமூலம் 568 பேருக்கும், சிறைச்சாலை கொத்தணி மூலம் 230 பேருக்குமே இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது.

இதன்படி கொரோனாவின் மூன்றாவது அலைமூலம் (மினுவாங்கொட, பேலியகொட, சிறைச்சாலை கொத்தணிகள்) இதுவரையில் 25 ஆயிரத்து 882 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

இதேவேளை, நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 29 ஆயிரத்து 378 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 21 ஆயிரத்து 258 பேர் குணமடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 978 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 142 உயிரிழந்துள்ளனர். (எ-22)

## மடு செல்ல...

களை நிறைவேற்ற நாங்கள் தயாராக உள்ளோம். அதனால் ஜனாதிபதியை நம்புங்கள். அவர் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுத் தருவார். எங்களின் நோக்கம் பழிவாங்குவது அல்ல; நாட்டுக்கு சேவை செய்வதே ஆகும்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மன்னாரில் அமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது காற்றாலை மின் உற்பத்தி நிலையம் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் திறந்துவைக்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில், 141 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 'தம்பபவனி' காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதைத் திறந்து வைத்த பின்னர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தேசிய மின் கட்டமைப்புக்கு 103.5 மெகாவோட் திறனை இணைக்கும் இலங்கையின் பெரும் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தைத் திறந்து வைக்கக் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். 2008 ஆம் ஆண்டளவில் மடு தேவாலயத்துக்குச் செல்லும் வீதி புனரமைக்கப்பட்டு, மடு திருவிழாவுக்கு நாட்டின் தலைவராக நான் வர விருந்தபோது, இங்கு வருவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அனுமதி பெற வேண்டும் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் தலைவருக்கு மடு தேவாலயத்துக்கு வருவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அனுமதி பெற வேண்டிய தொரு காலம் காணப்பட்டது. இந்த நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் வடக்கிலிருந்து தெற்குக்கும், கிழக்கிலிருந்து மேல் மாகாணங்களுக்கும் சுதந்திரமாகப் பயணிக்கக்கூடிய யுகமொன்றை அமைப்போம் என நான் அன்று மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன்.

2005ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வரும்போது இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 65 வீதமானோருக்கு மாத்திரமே மின்சாரம் காணப்பட்டது. 2015ஆம் ஆண்டில் மொத்த மக்கள் தொகையில் 98 வீதமானோருக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொடுக்க எமக்கு முடியுமானதாயிற்று.

எதிர்காலத்தில் மின் பற்றாக்குறையை நாம் சந்திக்க நேரிடும். அந்தச் சவாலை எதிர்கொள்ள நாங்கள் ஏற்கனவே மின் உற்பத்தி நிலையங்களை அமைத்து வருகின்றோம். மின்சாரத்தை உருவாக்க நாம் காற்றாலை மட்டுமல்ல, சூரிய சக்தியையும் பயன்படுத்தலாம்.

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டளவில் எமது நாட்டின் மொத்த மின்சாரத்தில் 70 சதவீதம் அல்லது 80 சதவீதம் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் தங்கியிருக்க வேண்டும்.

மின்சாரத்துறையில் இடம்பெறும் இந்தப் பெரிய மாற்றத்துக்கு இலங்கையில் பெரும் காற்றாலை மின்நிலையம் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமையும் என்பதை நான் நினைவூட்ட விரும்புகின்றேன். உங்கள் அனைவருக்கும் சுபீட்சமான எதிர்காலம் அமைய பிரார்த்திக்கின்றேன் என்றார்.

இந்த நிகழ்வில் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கே.திலீபன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், மன்னார் மாவட்ட அரச அதிபர் நந்தினி ஸ்ரான்லி மற்றும் மின்சார சபையின் தலைவர் பொறியியலாளர் விஜித ஹேரத் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (எ-22)

## ஆயுர்வேத....

கொரோனாவை கட்டுப்படுத்த ஆயுர்வேத மருந்து தயாரித்து அதில் வெற்றி பெற்றுள்ளேன் என மருத்துவர் தம்மிகா பண்டார தெரிவித்திருந்தார். இதனை சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியும் பருகியிருந்தார். இந்தச் செய்தி ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில் தான் கண்டுபிடித்த ஆயுர்வேத மருந்தை 5 ஆயிரம் பேருக்கு இலவசமாக இன்று வழங்கவுள்ளேன் என அவர் தெரிவித்திருந்தார். இதனையடுத்து அவரின் வீட்டின் முன்பாக பெருமளவானோர் குவிந்தனர். சமூக இடைவெளியின்றி அங்கு மக்கள் திரண்டதால் பொலிஸார் அவற்றைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

தம்மிகா பண்டாரா ஒரு காளி கோவிலை வைத்துள்ளதுடன் தனக்கு காளி கனவில்வந்து அருளியதாககூறியிருந்தார்.

அதேவேளை, மருந்து தயாரிப்பாளர் தம்மிகா பண்டார, தனது மருற்து வழங்கல் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என்று நேற்று மாலை தெரிவித்தார். கேகாலை மாவட்டச் செயலாளருடனான சந்திப்பு மற்றும் அவரது அறிவுறுத்தலின் பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்த மருத்துவ அறிக்கைகள் வரும் வரை பாணிமருந்து விநியோக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் என்று அவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ,இ)

## தெல்லிப்பழை...

கொள்ளப்பட்டது. மருத்துவர்களின் பணிப் புறக்கணிப்பால் நேற்று பல்வேறு சிகிச்சைகளும் நடைபெறவில்லை.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கான உணர்வழியல் வைத்திய நிபுணர் நியமனம், யாழ். மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைக் கழிவுகள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உரிய முறையில் எரியூட்டப்பட்டமை, மருத்துவர்களுக்கான விடுதி வசதி, வைத்தியர்களுக்குத் தேவையான முகக் கவசம், முகப் பாதுகாப்புக்கவசம், தனிப்பட்ட பாதுகாப்பு அங்கிகள் போதாமை, மேலதிக நேரக் கொடுப்பனவு ஒழுங்கான முறையில் வழங்கப்படாமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இரண்டு வாரங்களுக்குள் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படாதவிடத்து தொடர்ச்சியான, நீண்ட பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்த வேண்டி வரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## மருத்துவ....

பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தினசரி சுமார் 800 வரையிலான நோயாளர்கள் வெளி நோயாளர் பிரிவிலும் சுமார் ஆயிரத்து 100 நோயாளிகள் உள்ளக விடுதிகளிலும் சுமார் 2 ஆயிரத்து 600 நோயாளர்கள் பல்வேறு மருத்துவ சிகிச்சை பிரிவுகளிலும் மருத்துவ சேவையைப் பெறுகின்றனர். வடக்கில் ஏற்படும் எந்த மருத்துவ இடர்களுக்கும் இறுதியாக சேவை நாடும் ஒரே நிறுவனமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையே திகழ்கின்றது.

யாழ்ப்பாணத்தில் தினமும் நிகழும் வீதி விபத்துக்களால் தலையில் காயமுற்று உயிருக்கு போராடுபவர்களுக்கான மூளை நரம்பு சத்திர சிகிச்சை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் விபத்து அவசர சிகிச்சை பிரிவில் தனிப்பட்ட சத்திர சிகிச்சை கூடம், பிரத்தியோக விடுதி வசதி என்பனவற்றுடன் மேற்கொள்ளப்படுகின்றது.

அதனால் சுமார் 500க்கு மேற்பட்டோரின் உயிர்கள் அண்மைக்காலத்தில் காப்பாற்றப்பட்டுள்ளன. இந்தச் சத்திர சிகிச்சைக்கென சிறப்பான உணர்வழி வைத்திய நிபுணர் தனது கடமையை இங்கு செவ்வனே புரிகின்றார்.

இவரது சிறப்பு கடமைக்கு பதிலீடாக இடமாற்றத்தில் ஒரு உணர்வழி மருத்துவ நிபுணர் கடமையை பொறுப்பேற்கும் பட்சத்திலேயே அவ் வைத்திய நிபுணரை நிர்வாக ரீதியாக விடுவிக்க முடியும்.

அவருக்கு இடமாற்ற உத்தரவு இருப்பினும் யாழ் போதனா வைத்தியசாலையிலிருந்து வெறுமனவே விடுவிக்க முடியாது. அவ்வாறு விடுவிக்கப்படின் யாழ் போதனா வைத்தியசாலையின் மூளை நரம்பு மற்றும் இருதய சத்திரசிகிச்சைகள் முடிவுறுத்தப்பட வேண்டிய சூழல் ஏற்படும். பணிப்பாளர் என்ற ரீதியில் அத்தியாவசியமான சேவைகளை இடைநிறுத்தி ஒரு வைத்திய நிபுணரை விடுவித்தல் என்பது மிகவும் இக்கட்டான நிலைக்கு எமது வைத்திய சேவையை இட்டுச்செல்லும். இது தொடர்பாக எமக்கு புதிய வைத்திய நிபுணரை நியமிக்குமாறு சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளேன். என்றார். (எ-20)


## 20 நாள்களேயான...

நேற்று பச்சிளம் குழந்தையொன்று உயிரிழந்தது.

கொழும்பு, கிராண்ட்பாஸ் தொட்டலங்க பகுதியைச் சேர்ந்த பிறந்து 20 நாள்களேயான பெண் சிசுவொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். கொரோனா தொற்றால் இலங்கையில் பதிவான குறைந்த வயதுடைய மரணம் இதுவாகும்.

கடும் காய்ச்சல் காரணமாக குழந்தை நேற்றுமுன்தினம் இரவே கொழும்பு சீமாட்டி ரிஜ்வேசிறுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது. எனினும், சிகிச்சைபலனின்றி நேற்று உயிரிழந்தது. பி.சி.ஆர். பரிசோதனைமூலம் குழந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை கண்டறியப்பட்டது. நிமோனியாவுடன் கொரோனா தாக்கமுமே மரணத்துக்கு காரணமாகும். குழந்தையின் பெற்றோருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவர்களுக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-44,22)

# ஆஸிக்கு ஆறுதல் வெற்றி: தொடர் இந்தியாவின் வசம்



சிட்னி, டிசெ. 9

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் வெற்றிபெற்றது ஆஸ்திரேலியா. முதலிரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றதை அடுத்து தொடரை இந்தியா 2:1 என்று கைப்பற்றியது.

சிட்னியில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது. மத்தியூ வேட் 80 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். மத்திய வரிசையில் மக்ஸ்வெல் 54 ஓட்டங்களைப் பெற்றார். மத்தியூ வேட் வேளைக்கு பவிலியன் திரும்பியிருக்க வேண்டியவர். ஆனால் ரிவியூ ஒன்றை கோலி சரிவரக் கையாளாததால் அவர் தொடர்ந்து களத்தில் நிலைத்து நின்றார்.

பந்துவீச்சில் சுந்தர் 2 இலக்குகளையும், நடராஜன், சர்தூல் தாக்கூர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரரான லோகேஸ் ராகுல் ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

அணித் தலைவர் கோலி மிகச் சிறப்பாக விளையாடினார். தவான் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மத்திய வரிசையில் சாம்சன், ஸ்ரேயாஸ் இருவரும் தடுமாறினார்.

இது அணியைப் பெரும் சரிவுக்குள் தள்ளியது. இறுதி 3 பந்துப் பரிமாற்றங்களில் 44 ஓட்டங்கள் தேவை என்ற நிலை. 85 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோலி. பாண்டியாவும் பவிலியன் திரும்ப 12 ஓட்டங்களால் வென்றது ஆஸ்திரேலியா.

பந்துவீச்சில் ஸ்வெப்சன் 3 இலக்குகளையும், மக்ஸ்வெல், அப்பொட், சாம்பா நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஸ்வெப்சனும், தொடராட்ட நாயகனாக பாண்டியாவும் தெரிவாகினர். (ம)

Chemistry Class
Group & Personal Class
A/L, 2021,2022 Repeat
குறைந்த காலத்தில் Theory உடன் 40 வருட Past Paper செய்துவிடப்படும். (வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும் / Zoom மூலமாகவும் கற்கலாம்)
V.K. நந்தா 076 845 4365

ZOOM
Online English class
By:Mr.M.A.HARI
(யாழ். பிரபல ஆசிரியர்)
★ Spoken English with Grammar
★ Advance English
Starts on 12.12.2020
(அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்)
Saturday Sunday } 6.00 p.m - 7.00 p.m
வகுப்பில் இணைய
077 852 5589 தொடர்புகொள்ளவும்

## தொடரின் நாயகன் விருதை நடராஜனுக்குக் கையளித்து

# இதயங்களை வென்றெடுத்த அதிரடி மன்னன் பாண்டியா!



சிட்னி, டிசெ. 9

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ரி-20 தொடரில் தனக்குக் கிடைத்த தொடரின் நாயகன் விருதை நடராஜனுக்குக் கையளித்தார் பாண்டியா. இதையடுத்து பாண்டியாவின் செயலுக்கு வாழ்த்துமழை குவிந்து வருகின்றது.

இந்தத் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் பாண்டியாவும், நடராஜனும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

பாண்டியாவே ஆட்டநாயகனாகத் தெரிவானார். அந்த ஆட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த பாண்டியா, 'இந்த ஆட்ட நாயகன் விருது நடராஜனுக்குத்தான் வழங்கப்பட்டிருக்க வேண்டும்' என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தொடரின் நாயகன் விருதை பாண்டியா, நடராஜனுக்குக் கையளித்திருப்பதற்கு பலரும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர். (ம)

சாந்தி அக்கிறோ நீட்சின்
விவசாய பெரு மக்களுக்கான வெள்ள அனர்த்த உதவிகள்
உள்ளூர் மரக்கறி விதைகள், இறக்குமதி செய்யப்பட்ட (f1) மரக்கறி விதைகள், விவசாய உள்ளீடுகள், மருந்து தெளி கருவிகள், கிருமிநாசினிகள் விசேட கழிவு விலையில்
(01) கிராம சேவகரின் சிபார்சு கடிதத்துடன் வரும்
★மாற்று வலுவுடையோர்களுக்கு மட்டும்
(அ) உள்ளூர் விதைகள் முற்றிலும் இலவசம்
(ஆ) விவசாய உள்ளீடுகள் முற்றிலும் இலவசம்
(இ) இறக்குமதி செய்யப்பட்ட விதைகள் (f1) விசேட கழிவில்
(02) கிராம சேவகரினால் பரிந்துரைக்கப்பட்ட கடிதத்துடன் வரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாய பெருமக்களுக்கு
(அ) இறக்குமதி செய்யப்பட்ட விதைகள் (f1) விசேட கழிவில்
(ஆ) உள்ளூர் விதைகள் 50% கழிவில்
(இ) விவசாய உள்ளீடுகள் விசேட கழிவில்
தொ.இல: 077 881 4228
021 222 0306
தே.இராஜேந்திரன் - உரிமையாளர்
சாந்தி அக்கிறோ நீட்ஸ்
இல.50, பலாலி வீதி, திருநெல்வேலி.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.